1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 23-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆனிமாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

"டேமியன்பாதிரியாரின் திருப்பணி"

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவ்விதம்இவர் நல்லூழியம் புரிந்துவரும் காலத்தில் ஹவாய்யன்தீவுகளில் குஷ்டரோகம் அதிகமதிகமாய்ப் பரம்பிக் கொண்டுவந்தது. இதைப்பரம்பவொட்டாமல் அரசினர் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துவந்தனர். இத்தீவுகளுள் மொலாக்காய்என்ற ஒருசிறுதீவு இருக்கிறது. இத்தீவிற்குக் குஷ்டரோகிகளைப் பிடித்துஅனுப்ப வேண்டுமென அரசாங்கம்தீர்த்தது. ஹவாய்யன்தீவுகளில் இருந்த குஷ்டரோகிகள் மொலாக்காய் தீவுக்குக் கிரமமாய் அனுப்பப்பட்டுவந்தனர். பொலிசர் ஒவ்வொரு வீடாய்ப்போய்க் குஷ்டரோகம் இருக்கும்என்று சந்தேகப்படுகிறஎல்லாரையும் டக்றரிடம் கொண்டுபோய்ச் சோதனைக்குவிடுவார்கள். குஷ்டரோகத்தின்குறிகள் இருக்கிறது என்று டக்றர் சொன்னால் போதும்; அவர் யாராய்இருந்தாலும் சரி, அவர்களைப்பிடித்து இரண்டாம் பேச்சின்றி மொலாக்காய்தீவிற்கு அனுப்பி விடுவார்கள்.

தாயினிடத்திலிருந்து பிள்ளையையும், புருஷனிடத்திலிருந்து மனைவியையும், பிள்ளையை விட்டுத் தாயையும், மனைவியைவிட்டுப் புருஷனையும்பிரித்தெடுக்கும் இந்தக் காட்சி மிகவும்பரிதாபமாய் இருந்தது. தமியான்சுவாமியாரின் சபையில் (பங்கில்) இருந்து இவ்விதம்அநேகர் பரிதாபமாகப் பிரிக்கப்பட்டு மொலாக்காய் தீவுக்குஅனுப்பப்பட்டனர். இக்காட்சியைக்கண்ணுற்ற தமியான் மிகவும்வருந்தினர். இவரின்உள்ளம் பிள்ளையைவிட்டுப்பிரிந்த தாயின்உள்ளம்போல் துடித்தது. அவர்களைத்திரும்பிப்பார்க்க முடியாதென எல்லாரும்கலங்கும்போது தமியன்சுவாமியாரின் உள்ளத்தில்இக்குஷ்டரோகிகளைத் திரும்பித் தான்பார்க்க முடியும்என்ற சத்தம்உதித்தது. இதுஎப்படி?

மொலாக்காய்தீவுக்கு அனுப்பப்பட்ட குஷ்டரோகிகள் ஒருவிதமாயும் கவனிக்கப்படவில்லை. இவர்கள்நிலைமை பரிதாபமாயிருந்தது. அவர்களுடைய ஆத்துமாவைப்பற்றியோ, அல்லது சரீரத்தைப்பற்றியோ ஒருவரும் கரிசனை எடுக்கவில்லை. காட்டில்வாழும் மிருகங்களைப்போல மரங்களுக்குக்கீழ் அத்தீவில் தங்கள் வாழ்க்கையை நடத்திவந்தனர். இவர்களின் நிலையைக்கண்டு கடவுளும் தன் சாயலாக உருவாக்கப்பட்ட தன் பிள்ளைகளின் கவலைகளைக் கவனித்தார். இவர்களுக்குக் கடவுள் உதவிபுரியும் காலமும் வந்தது.

இக் குஷ்டரோகிகளின் மத்தியில் சேவையுரிய யாராவது கிடைப்பார்களாஎனக் கத்தோலிக்க பிஷப் ஆலோசித்தார். மொலாக்காய்தீவிற்கு அருகிலிருந்ததீவிற்குப் பிஷப்வந்த நேரத்தில், குஷ்டரோகிகளிலே பிஷப்புக்குஇருந்த அனுதாபத்தைஅறிந்து தமியான் உடனே சந்தோஷமாகத் தன்னை இக் குஷ்டரோகிகளின் மத்தியில் கிறிஸ்தவசேவைசெய்ய அனுப்பும்படி ஆவலுடன்கேட்டார். குஷ்டரோகிகளுக்கு ஊழியம் செய்யத் தமியான் அனுப்பப்பட்டார். கரைசேருவோம்என்ற நம்பிக்கையில்தான் கடலோடுகிறான் கடற்தொழிலாளி. புயலுக்

— D. R. A. —

குப்பயந்தால்அவன் புறப்படமுடியுமா? வாழ்வோம்என்ற நம்பிக்கையில்தான் துணை தேடுகின்றான் மனிதன். இடையில் கைவிடப்படுவோம்என்ற அவநம்பிக்கைகொண்டால் மணம் செய்துகொள்ள முடியுமா? ஊதியம்பெற்று உயிர் வாழ்வோம் என்ற நம்பிக்கையில்தான் தொழிலகம்செல்கிறான் தொழிலாளி. தடியடிபடுவோம்என்று நினைத்தால் அவன் வாழமுடியுமா? முத்தெடுப்போம் என்ற நம்பிக்கையால்தான் கடலடி வாரத்தில்செல்கிறான் முத்துக்குளிப்போன். சுறா மீனுக்குப் பயந்தால்அவன் தன்முயற்சியில் வெற்றிபெறமுடியுமா? இதேபோல் தமியான சுவாமிகளும் தான் புதிதாகத் தொடங்கப்போகும் ஊழியத்தைக் கடவுள் நிறைவாகஆசீர்வதித்து இறுதிவரை தனக்குஏற்றசுகத்தையும் கொடுப்பார்என்ற முழுநம்பிக்கையுடன் 1873-ம் வருடம் மொலாக்காய்தீவுக்குப் போனார்.

மொலாக்காய்தீவிற்கு வந்ததும் குஷ்டரோகிகள் இருந்த

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

கத்தோலிக்க குடும்பம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இத்தகைய வெற்றியை நாம் அடையவேண்டுமாயின் குடும்பத்தின் ஒவ்வொருஅங்கமும் தத்தமக்குரிய கடமையைச் சரிவர அறிந்து சுமுத்திரையாக நிறைவேற்றுவது மிகஅவசியம். குடும்பதலைவன் கணவன். மனைவி அவன் துணைவி. தலைவியுமல்ல, அடிமையுமல்ல. ஆதலால்அவளைத் துணைவிபோல் பாவித்து ஆதரிக்கவேண்டியது கணவனின்கடமை. அவளை அடிமைபோல் குதிக்காலின்கீழ் போட்டுமிதிப்பதும் சரியன்று. தலைவிபோல் தலைமேல் தூக்கிவைப்பதும் சரியன்று. கணவன் தனதுகாவலாளிஎன்று சகலத்திலும் அவனுக்குப்பணிந்து துணைபுரியவேண்டியது அவள் கடமை. ஆனால், அடிமையென்று மனம்கசிந்துபோக வேண்டாம். துணைவிபோல் சகலதிலும் அவனுடன் ஒத்திருக்க வேண்டும். சுவிசேஷத்தில் சொல்லியிருப்பதுபோல் அவர்கள் ஓர்உடலும் உயிரும் போன்று சீவிக்கவேண்டும்.

கணவன்-மனைவியினது அன்பின்கனிகளே பிள்ளைகள். இவர்கள் கடவுளின்சாயலான சிருஷ்டிகள். தாய்தந்தையர் பிள்ளைகளைநேசித்து, கடவுளுக்குகந்த சன்மார்க்கநெறிகளை அவர்களுக்குப் படித்துக்கொடுத்து நன்னெறியில் அவர்களை வளர்க்கவேண்டியது. பிள்ளைகளும் பெற்றோருக்குச் சங்கைசெய்து, அவர்களுக்குக்கீழ்ப்படிந்து மேரைமரியாதையுடன் நடப்பதோடு, விருத்தாப்பிய காலத்தில் அவர்களுக்குவேண்டிய ஆத்தும சரீர உதவிகளும் புரியவேண்டும். தாய்தந்தையர், மாமன்மாமியார் முதலியவர்களுடன் சண்டையிட்டு, அவர்களைத் துன்புறுத்தி ஓயாதசச்சரவுக்குக் காரணமாயிராமல், தங்கள் நிலைமைக்கும், அவர்கள்தகுதிக்கும் ஏற்றவாறு அவர்களையும் ஆதரித்து, அவர்களுக்குப் போதுமான உணவு உடை கொடுத்து, அவர்களையும் பட்சத்தோடுவிசாரித்து நடத்துவது குடும்பத் தலைவர்களின் பெருங் கடமையாகும்.

'தொட்டிலாட்டுங்கையே உலகையாளுங்கை' என்ற பழமொழியின்கருத்துப்படி, உலகையாளும்வீரர்களை உண்டுபண்ணுகிறவர்கள் தாய்மார்களே. வருங்கால உலகம் எப்படியிருக்குமென்று, இன்றையதாய்மார்கள் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதற்குப்போடும் திட்டத்திலிருந்து நாம்தீர்மானிக்கலாம். குழந்தைகளை வளர்ப்பதற்குத் தாயுந்தகப்பனும் பொறுப்பாளிகள். எனினும் குழந்தையின் குணத்தை உருவாக்குவதில் முக்கியபாகம்வகிப்பவள் தாயே. குழந்தைகள் முதன் முதல் பேசும் மழலைச்சொற்களைத் தாயிடமிருந்து தான் கற்றுக்கொள்ளுகின்றன. அதனால்தான் 'தாயைப்போல் சேய், நூலைப்போல் சேலை' என்ற மூதுரை நம்மத்தியில் வழங்குகிறது. தாய் தனதுபாலோடு பிள்ளைக்குப் பேச்சும்ஒழுக்கமும் கற்பிக்கக்கூடியவள். ஆகவே, பேச்சு, நடை, உடை, பாவனைகளில் நற்படிப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமானஎதுவும் குழந்தையிடம்கண்டால் அவள் தன் குழந்தையைத்திருத்தி நற்பழக்கத்தைப் பழக்கவேண்டும்.

Mrs. Joan of Arc, B. A., B. T.

பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு, உடை விஷயத்திலும் தாய்தந்தையர் கவனம்செலுத்த வேண்டும். பிள்ளையின் தேகவலிமைக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ற உணவைத் தங்கள்நிலைமைக்கேற்றவாறுஅளிக்க அவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால், 'வயிறேதெய்வம்' என்று பிள்ளைகளை மிதமிஞ்சி உண்ணவைப்பதும், கண்டநேரமெல்லாம் உண்ணும் பழக்கத்தை உண்டுபண்ணுவதும் தவறு. அமிதபட்சணம் பலகோளாறுகளுக்கும், புத்தித்தளர்ச்சிக்கும் காரணமாகும். ஆரோக்கியத்திற்கும், சரீர வளர்ச்சிக்கும் தேகப்பயிற்சி தேவையாதலால் பிள்ளைகளுக்குப் போதியவிளையாட்டுநேரம் அனுமதிக்கவேண்டும்.

மாந்தருக்குக் கண்போன்று உதவும் கல்வியைத் தமதுமக்களுக்கு ஊட்டுவது பெற்றோரின் மாபெருங்கடமையாகும். சிலபெற்றோர் வீட்டில் பிள்ளைகளின் தொந்தரவுகளைத் தாளமாட்டாமல் 'சனியன் எங்கேயாவது தொலையட்டும்' என்று பிள்ளைகளைப் பாடசாலைக்குஅனுப்புவ

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசு என்வாழ்வின் ஒளி

“வாழ்வில்எல்லோரும் தவறுசெய்வது சகசம். இதைநாம் நமது இரட்சகர் யேசுபெருமானின் சீவிய சரித்திரத்திலிருந்து அறியலாம். ...ஆம், எல்லோரும் தவறுசெய்கிறார்கள். ஆனால், தவறை உணர்ந்து துக்கிப்பவர்களுக்குமட்டும் இரட்சணியமுண்டு...”

நான் ஒரு தவறுசெய்து சமூகத்திடம் பிடிபட்டுவிட்டேன். ஐயோ! என்னை இந்தப்பாழாய்ப்போன சமூகம் படுத்திவிட்டபாடு! உலகத்தில் யார்தான் தவறுசெய்யா திருக்கிறார்கள்? தவறுசெய்யாதவன் மனிதனல்லஎன்றுதான் சொல்லவேண்டும். சம்மனசுகள்கூடத் தவறுசெய்ததாற்றானே நரகச்சுவாலையில்கிடந்து ஆக்கினைப்படுகிறார்கள். இப்படியெல்லாம் இருக்க நான்—ஒரு பேதைப்பெண்—வஞ்சகமறியா நெஞ்சமுள்ள பெண்—ஒரு தவறுசெய்ததைப் பிரமாதப்படுத்திவிட்டது சமூகம்.

இந்தச்சமூகத்தின் மனம் மாறவேண்டும். நல்லவிசித்திரமான சமூகம். திருடுபவன் திருடனல்ல; திருடிஅகப்பட்டவன்தான் திருடன். இன்றையசமூகத்தின் நீதி இதுதான்.

எத்தனையோபேர்—ஏன் எல்லோருமே—தவறுசெய்கிறார்கள் என்பதற்காக நான் குற்றம்செய்யவில்லை. அப்படியானால் அது மன்னிக்கமுடியாத குற்றம். “நீ ஏன் கொலைசெய்தாய்?” என்று நீதிபதிகேட்கும் கேள்விக்கு “நான் மட்டும்தானா கொலைசெய்தேன்? எத்தனைபேர் கொலைசெய்கிறார்கள்?” என்றுகூறுவது காரணமாய் இராது.

நான் குற்றம்செய்தேன். காரணம், எல்லோரும் குற்றம்செய்கிறார்கள் என்பதல்ல. குற்றமாகும் என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது. இதுவும் தகுந்தகாரணமல்ல. சட்டம்தெரியாது என்பதற்காகக் குற்றவாளி விடுதலையடைவானா?

என்பிழைக்குத் தகுந்தகாரணம் காட்ட என்னால் முடியாது. காரணமிருந்தால்தான் அதுபிழையாகாதே! காரணம் கூறவேண்டுமானால் என் ஆசாபாசம்—பருவக்கோளாறு—இவைகள்தான் காரணம். எல்லாவற்றிலும் பார்க்கக் ‘காதல்’ ‘காதல்’ என்று சிலர் பிதற்றியதைக்கேட்டு அது தெய்வீகமானது என்று நம்பியதுதான் என் தவறு.

எல்லாப்பெண்களையும்போல் இராமல் நான் இடாம்பீகமாகத் திரிந்தேன். வேளைக்கு ஒரு வேடம்போட்டேன். நாளுக்கு ஒரு சினிமா பார்த்தேன். கைக்கெட்டிய புத்தகங்கள் எல்லாவற்றையும் படித்தேன். காட்சிகளிலும், கற்பனைகளிலும், உள்ளபடி எனது வாழ்க்கையிலும் நடக்கவிரும்பினேன். இதன் பலனாகத்தான் என்மனத்தில் அந்தப்புயல் எழுந்தது. துரும்புபோல் நான் தத்தளித்தபோது ஒரு காதலன் வந்து அகப்பட்டான். ஆ! எனது அந்தவாழ்க்கைபற்றி நான்கண்ட கனவுகள் எத்தனை! கட்டியஆகாயக்கோட்டைகள் எத்தனை! அவ்வளவுதானா? எங்கள் வாழ்க்கைபற்றி நானும் எனது காதலனும்சேர்ந்து எவ்வளவு கேலி பண்ணினோம். எத்தனைதத்துவங்கள் பேசினோம்? வாலிழந்த நரிஒன்று மற்றநரிகள் எல்லாவற்றையும்பார்த்து, “ஏய் முட்டாள்களே, வாலின்றி நான் எவ்வளவு அழகாகஇருக்கிறேன். உங்கள்வால்களையும் வெட்டியெறியுங்கள்” என்று சொன்னகதை போன்றதுதான் பிறரைப்பற்றிய எங்கள்கேலியும்என்று அப்போது என்னால் உணரமுடியாமற் போய்விட்டது! இதற்காகத்தான் காதலுக்குக் கண் இல்லை என்றார்கள் போலும்! கண் இல்லாக் காதலை நமக்கு எதற்கு என்று எவராவது சிந்திக்கிறார்களா? காதலுக்குக் கண்மட்டுமல்ல, சிந்திக்கும் திறமையுமே இல்லைப்போலும்.

நான் காதலித்தேன். காதலிக்கப்பட்டதாகவும் எண்ணிக்கொண்டேன். எல்லாவற்றையும்விட அநேகமான காதலிகளின்கதியை நானும் அடைந்தேன். ஆம், என் ஆருயிர்க் காதலர் என்னைவிட்டு எங்கோ தப்பியோடிவிட்டார். சும்மாஅல்ல. என்கற்பை அழி......! நான்கற்பிழந்தேன். அதன் பலனாக என்வயிற்றில் அவமானச்சின்னம்ஒன்று உருவாகியது. இச்சந்தர்ப்பத்தில்தான் “பனையாலேவீழ்ந்தவனை மாடேறி மிதித்ததுபோல்” சமூகம் எனக்கு ‘விபசாரி’என்ற கௌரவப்பட்டத்தை மனமுவந்துவழங்கியது. ஊர்க்காலிகள் என்னைத் தங்கள்கேலிகளின் ஜாபிதாவில் சேர்த்துக்கொண்டார்கள். ஐயையோ! நான் பட்டபாட்டைச் சொல்லிமுடியாது! மனக்கவலை ஒருபக்கம். ஊர்க்கேலி மற்றோர்பக்கம்.! வயிற்றில்வளரும் சிசு எனது தவறை எடுத்துக்காட்டுகின்ற நடமாடும் ஞாபகச்சின்னமாகப் போகிறதேஎன்றபயம் வேறோர்பக்கம். அதனால், தற்கொலைசெய்து கொள்ளட்டுமா என்று தோன்றும். ஆனால், வாழவேண்டும் என்ற ஆசை அதற்குத் தடையாகநிற்கும்.

ஒரு நாள் .... என்வீட்டுமாடு அடுத்தவீட்டுக் கொல்லைக்குள்புகுந்து பயிரைத்தின்றுவிட்டது. அந்தவீட்டு அம்மா என்மாட்டைத் திட்டினார்கள். மாட்டுக்குவசைபாட என்பிழையைப் பயன்படுத்திக்கொண்டாள். எனக்கு

காவலூர் — டேவிட்

ஆத்திரம் அதிகமாக உண்டாகியது. பதிலுக்கு நானும் ஏதேதோ உளறினேன். ஊரேகூடிவிட்டது. கடைசியில் ஊரார்முழுப்பேரும் ஒன்றுசேர்ந்து என்னைத் திட்டினார்கள். இனி என்னசெய்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன் நான்.

இந்தச்சந்தர்ப்பத்திலே எரிகிற நெருப்பில் எண்ணெய்வார்ப்பதுபோல “வில்லம்பு பட்டபுண் வேதனைதாது; சொல்லம்பு சுட்டபுண் ஆறாது”என்று பாடிக்கொண்டுபோனான் ஒரு பரதேசி. “ஆம், சொல்லம்பு சுட்டபுண் மாறாது தான்”என்று என் அந்தராத்மா தாளம் போட்டது. அதனால் நான் மாண்டால் என்னோடு என் அவப்பெயரும் மாளும் என்றமுடிவுக்குவந்தேன். சாகவென்று முடிவுக்குவந்தாலும் நாளைக்கு நாளைக்கு என்று நாளைப்பின்தள்ளிப் போட்டுக் கொண்டேவந்தேன். பதினெட்டுவயதுப் பருவமங்கைக்கு எப்படிச் சாகமனம்வரும்?

* * *

அன்றொருநாள், இரவுநடுநிசி. நல்ல மழைபெய்தது. நான் நித்திரையின்றிப் புரண்டுகொண்டே கிடந்தேன். யாரோ கதவைத்தட்டும் சத்தம்கேட்டது. திறப்பதா, விடுவதா என்று ஒரு கணம் சிந்தித்தேன். மறுகணம் “பாவம், யாரோ மழையில் நனைகிறார்கள் என்று இரங்கிக் கதவைத்திறந்தேன். என் எதிரே ஒரு குருவானவர் நின்றுகொண்டிருந்தார்.

இப்படியான எண்ணங்களுடைய என்வீட்டில் கத்தோலிக்க குருவானவர்ஒருவர் நின்றிருந்தாரென்றால் அவரை வரவேற்கக்கூட முடியவில்லை. குருவானவரே பேசினார் ....“பிள்ளாய்! சமீபத்தில் ஒருநோயாளி மரணப்படுக்கையில் கிடந்தார். எனக்கு ஆள்வந்தது. கடைசித்தேவதிரவிய அனுமானங்களைக் கொடுத்துவிட்டுவருகிறேன். மழை பிடித்துக்கொண்டது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

யாத்திரை செய்திடும் ஆத்துமமே!

சீர்த்தி நிறைந்து சிறந்த மடுப்பதி
யாத்திரை செய்திடும் ஆத்துமமே!
சேர்த்தே ஒழுகுங்கள் நேர்த்தியாய்ச் சொல்லுவேன்
காத்து நலத்திற் கதிப்பாயே.

வசனம்:— மருதமடுத் திருப்பதிக்கு யாத்திரைசெய்யும் ஆத்துமமே நீ இந்தயாத்திரையில் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகளைச் சேர்த்துக்கூறுவேன். அவைகளைக்காத்து நன்மையடைந்து கொள்வாயாக.

எங்கள் சொந்தநகர் இங்கல்ல என்றுநீ
அங்கன்று போகையில் ஆழ்ந்தே எண்ணி
தங்கும் இடங்களில் எங்கும்வான் நாடதின்
மங்கா நினைவால் மகிழ்வாயே.

வசனம்:— ஊர்விட்டு ஊராகவும், காடுவிட்டுக் காடாகவும் பிரயாணம் பண்ணிக்கொண டிருக்கும்போது, இவ்வுலகமானது நமது சொந்தவூர் அல்லவே; நாம்யாவரும் பிரயாணிகளே என்றதை நினை. ஒவ்வோர்விடுதியிலும் போய்ச்சேரும்போதோ நீ ஓர்நாட் போய்ச்சேரஆசிக்கிற பேரின்ப தலமாகிய மோட்சவீட்டை நினைந்து ஆனந்தங்கொள்ளக்கடவாய்.

போகும் வழியினில் ஆகும், பிரயாசை
சோகம், பசி, களை, தாகங்களை
வேகமுடன் நீசெய் பாவங்களின் கடன்
ஆகும்படி கை யளிப்பாயே.

வசனம்:— திருப்பதி யாத்திரியே! நீ வழியிலும் தெருவிலும் விடுதியிலும் திருப்பதியிலும் படும் பிரயாசகஷ்டங்களையெல்லாம் உன்பாவங்களுக்குப் பரிகாரமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவைகளைப்பார்த்து அவர் உனக்குப் பொறுத்தல்தாக் கருணையாகும்படி மன்றாடுவாயாக.

நல்ல தவஞ்செய்யும் நாள்இவை யேயென்று
சொல்லி ஒறுத்தல் தொடரல் நன்று.
செல்லநடை, வெறி எலலாம் தகாதறி.
அல்லாது யாத்திரை ஆகாதே.

வசனம்:— இந்நாட்களே உன்பெரும் பாவங்களுக்காய் அருந்தவஞ்செய்ய நல்லவையென்று உணர்ந்து, போசனப்பிரியத்தைவென்று, மட்டசனத்தில்நின்று, குடிவெறி, விலக்கப்பட்டநாளில் மாமிசம்உண்ணல் இவைகளிற்சேராமல், சரீரத்தைப்பாராமல் ஒறுத்தலின்வழியில் நடந்தாலே திருப்பதியாத்திரை உனக்குச்சித்திக்கும் என்றறிவாயாக.

காலை. மாலைச்செபம் சீலமுடன் சொல்லு;
நாலைந்து பேர்கூடி னாலே நலம்.
வேலைஇன்றே வேறிக் காலத்தி னிற்செப
மாலைத் துதியை மறவாதே.

வசனம்:— ஓ, யாத்திரியே! காலையும்மாலையும் செபஞ்செய்தல்லாமல் எழுந்துநடக்கவாவது விழுந்துபடுக்கவாவது வேண்டாம். இச்செபங்களைக் கூட்டங்கூட்டமாய்ச்சேர்ந்து செய்தலேஉத்தமம். நீ தேடிப்போகிற மாதாவுக்கு மிகவும்உகப்பான செபமாலையை ஓதாமல்விடுகிறதோ பெரும்பிசகாகும். முழுச்செபமாலையையும் நாள்தோறும் நடந்துநடந்து ஓதநேரமுண்டே.

உத்தம மாகநீ இத்திரு யாத்திரை
பத்தியுடன்செய்ய எத்தனித்தால்,
சுத்தன்மாதாவுங் கருணைகொண் டுன்னுடை
சித்தப் படியெல்லாம் செய்வாரே.

வசனம்:— ஆமாம். கஷ்டப்படுவாயானால் உன் இஷ்டப்படிநடக்கும். வருத்தப்படுவாயானால் இரக்கம்கிடைக்கும். பத்தியுடன் யாத்திரைசெய்தால் மாத்திரம் மெத்தநன்மையுண்டு. பரிசுத்ததேவதாயார் உனக்கு உன்விண்ணப்பத்தைஅருளக் கருணைகொள்ளத்தக்கதாக நீ நடந்துகொள்ளக்கடவாயாக.

நானா சங்கதிகள்

—அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திருமேனியானது வருகிறமார்கழி, தைமாசங்களிலே பகிரங்ககாட்சிக்கு வைக்கப்படும்போது அதனைத்தரிசித்துப் பத்திசெய்வதற்கென அமெரிக்க ஐக்கியதேசம், ஸ்பெயின், போர்த்துக்கால், ஜேர்மனி, சுவிற்சர்லாந்துமுதலாம் நாடுகளிலிருந்து யாத்திரைகள் நடத்துதற்குப் பிரயாணக்கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

—ஜேர்மனியிலே முன்னர் வர்த்தகத்தொழில்களிலும், மற்றும் தொழில்துறைகளிலும் ஈடுபட்டிருந்தவர்கள் மத்தியிலே பின்னிட்டவயதில் குருமாராகின்றவர்கள் தொகை அதிகரித்துக்கொண்டேவருகிறது. முன்னர் ஓர் தொழில் முதலாளியாயிருந்த திரு. வாலற்றர் குரேஸ்அவர்கள் தமது 57-ம்வயசிலே குருமடத்திற்சேர்ந்து சமீபத்திலே வூர்ஸ்பேர்க்நகரில் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றார்.

—ஒல்லாந்திலே பிரபலநாவல் ஆசிரியையான வில்லி கோர்சாறி எனும் மாது புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கின்றாள். ஞானஸ்நானத்தின்போது பிரபல உலாந்த நூலாசிரியராயிருந்து மனந்திரும்பிய பீற்றர் வான்டெர்மீர்அவர்கள் இவளின் ஞானத்தகப்பனாயினார். இவர் பிரான்சியபோரான கத்தோலிக்க எழுத்தாளராகிய லீயோன் புளோப் என்பவர்எழுதிய நூல்களை ஆராய்ச்சிசெய்தே மனந்திரும்பினார்.

—ஸ்பானியதேசம் 27,000 குருமாரை—அதாவது ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் ஒருகுருவானவர்வீதம்—கொண்டிருந்தபோதிலும் அங்குகுருமார் இல்லாத 6,000 விசாரணைப்பங்குகள் இருந்துவருகின்றன. ஆனால், குருத்துவமாணவர்தொகை வெகுவாக அதிகரித்து வருகின்றது. 1936-ம் ஆண்டிலே 7,500 குருத்துவமாணவர் இருந்தவிடத்திலே தற்போது 17,000 வாலிபர்கள் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க சமாச்சாரம்

அதிமேற்றிராணியாரின் யூபிலி

கனடாவிலே குவெபெக்நகர் அதிமேற்றிராணியாரான றே ஆண்டவர் சென்ற 7-ந்திகதியன்று தமது குருத்துவ வெள்ளி யூபிலியைக் கொண்டாடிய போது, அதன் ஞாபகார்த்தமாகப் பரிசுத்தஸ்தானத்தின் விசேஷ அனுமதியின்பேரிலே நகரின் மகாமண்டபத்தில் 25 குருத்துவமாணவர்களுக்குக் குருத்துவாபிஷேகஞ் செய்யலாயினர். அவரது குருத்துவ விழாக் கொண்டாட்டங்களிலே இதுவும் ஒன்ருக இடம்பெறலாயிற்று. அபிஷேகதிருச்சடங்குவேளை அந்தமண்டபத்தில் சமுகமாயிருந்த 12,000 பேரில் தங்கள் குருத்துவ வெள்ளியூபிலியைக் கொண்டாடும் அநேக குருப்பிரசாதிகளும், சந்நியாசர் கன்னியாஸ்திரீமாரும், தங்கள் வெள்ளிக் கலியாணத்தைக் கொண்டாடும் 500தம்பதிகளும் சமுகமாயிருந்தார்கள்.

ஜனுவாரியாரின் உதிரம்

இத்தாலியிலே நேப்பிள்ஸ்நகரின் பாதுகாவலரான அர்ச். ஜனுவாரியாரின் திரு உதிரமானது அந்நகர் ஆசனக்கோவிலிலே இரு கண்ணடிக்குப்பிகளில் பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்பட்டுவருவது உலகம் அறிந்ததே. உறைந்துபோய் இருக்கும் இந்த உதிரமானது அவ்வர்ச்சியசிஷ்டரின் திருநாளாகிய சென்ற வைகாசிமாதம் 4- திகதி ஞாயிறுவாரம் 30 நிமிஷத்தில் அற்புதமாகஉருகி நீர்மயமாயிற்று. பரம்பரையான திருவைபவத்தை முன்னிட்டு அவ்வேளை ஆசனக்கோவிலில் நெருக்கமாகக் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் இத்தச்சுபசெய்தி அறிவிக்கப்பட்டதும் வாழ்த்தொலிசெய்தார்கள். அர்ச். ஜனுவாரியார் கி. பி. 305-ம் ஆண்டு தியோக்கிளேசியனது ஆட்சியின்கீழ் வேதசாட்சியாக மரணமடைந்தார்.

முத். றேஸ் வெனெறினி

வெனெறினிய கன்னிகா சபையை அடியிட்டவளான ஆசா. றேஸ் வெனெறினிஎனும் கன்னியாஸ்திரீ சென்றவைகாசி 4-ந்திகதியன்று சம்பேதுருவானவர் மகாலயத்தில் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படலாயினள். வழமைபோல அன்று சாயந்தரம் பரிசுத்த பாப்பரசர் மகாலயஞ்சென்று பாரம்பரியமான பூசிதவழிபாடுகளை அவளுக்குச் சமர்ப்பிக்கலாயினர். 1656-ம்ஆண்டு பிறந்த முத். றேஸ் அம்மாள் சிறுமிகளை ஒன்றுசேர்த்து ஞானோபதேசம் கற்பிப்பதையே தனது ஆரம்பபணியாகக் கொண்டு, பிந்தஅவர்களுக்கென்று இலவசபாடசாலைகளைத் திறந்தாள். இவள் ஏற்படுத்திய கன்னிகா சபையின் முதல்மடம் றோமை நகரின் வடமேற்குப்பகுதியிலுள்ள விற்றர்போ என்ற இடத்திலே 1685-ம்ஆண்டு அடியிடப்படலாயிற்று. இச்சபையிலே முதன்முதலாகச் சேர்ந்து கொண்டவர்களில் அர்ச். லூசி பிலிப்பினி அம்மாள் 1930-ம் ஆண்டு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்றனள். அன்று ஐந்து கருதினல்மாரின் சமுகத்திலே நடந்தேறிய முத்திப்பேறுபெற்ற திருப்பட்டவைபவத்தின் போது 35,000 பேர் மகாலயத்தில் குழுமியிருந்தார்கள்.

நவீன குற்றச்சாட்டுகள்

சீனவிலே ஹொங்கோங்கிலிருந்து வடக்குப்புறமாய் 200 மைல் தூரத்திலுள்ள ராங்கியாங் எனும்கிராமத்திலே கம்யூனிஸ்த அதிகாரிகள் வண. லோறென்ஸ் கேட்ரிஸ் சுவாமியாரில் 18 குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவரைப் பெரியகிறிமினல் குற்றவாளியாக்கிச் சிறைவைத்தார்கள். அக்குற்றச்சாட்டுகளிலே "அவர் தமது விசாரணைப்பங்கிலே குஷ்டரோகத்தைப் பரப்பினர்" என்பது ஒன்ருகும். அதாவது அவரும், அவரது பங்கைச்சேர்ந்த கிறீஸ்தவர்களும் அந்தக்கிராமத்திலும், அதற்கு வெளியிலும் இருந்துவந்த 120 குஷ்டரோகிகளுக்கும் தங்களாலானஉதவியைச் செய்துகொண்டு வந்தது தான் அந்தநவீன குற்றச்சாட்டுக்குக்காரணம். மற்ருேர் குற்றச்சாட்டு யாதெனில், பாடசாலைப்பிள்ளைகளைக் கடிக்கும்படி நாய்களைப்பழக்கு கிறுர்என்பது. பிந்தச்சுவாமியார் கம்யூனிஸ்த கடதாசிநாணயமாக 16 லட்சம்டலர், அதாவது 20பவுண் குற்றப்பணம் இறுத்ததன்மேல் சீனவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். தமது கோவிலைக் கம்யூனிஸ்தர்கள் பூட்டியபின் சுவாமியார் உடைக்கப்பட்ட நற்கருணைப்பாத்திரம் ஒன்றின் மேல்மூடியை உபயோகித்து அந்தரங்கமாகத் திவ்வியபூசை நிறைவேற்றிவந்தார்.

முப்பதுலட்சம் வாசகர்கள்

"அவர் சன்டே விசிற்றர்" அதாவது தமது ஞாயிறுவாரத் தரிசகர்" எனும் அமெரிக்க கத்தோலிக்க வாரவர்த்தமானப் பத்திரிகையை வாரந்தோறும் 30 லட்சம்பேருக்கு மேற்பட்ட மக்கள் படித்துவருவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஆரம்பமான 40-ம்ஆண்டு சென்ற வைகாசிமாதம் 10-ந் திகதி பூர்த்தியாயிற்று. இதனை ஆர்வத்துடன் படிப்பவர்களில் ஐம்பதினயிரம் பேர்வரையில் கத்தோலிக்கர் அல்லாதவர்களே. இப்பத்திரிகையின் பதினன்குபதிப்புகள் உலகில் ஆங்கிலம் பேசுகிறஅல்லது படிக்கிற ஒவ்வோர் நாட்டுக்கும் செல்லுகின்றன. இது ஆரம்பமான நாள்முதல் ஒவ்வோர்வெளியீடும் நொல் மேற்றிராணியாரின் கட்டுரைகளை அடக்கியுள்ளது. அவரே இன்னமும் அதன்ஊக்கமுள்ள ஆசிரியராய் இருந்து வாரம்ஒன்றுக்கு வழமையிலே ஐந்து அல்லது ஆறு கட்டுரைகளை எழுதிவருகின்றர்.

மாமடுவாழ்

செபமாலை மரியன்னைக்கு!

கன்னியர்க் கரசேஅம்மா! கானகந் தனில்எழுந்த
உன்னைவாழ்த் திடுவதற்காய் ஊர்விட்டே அடியேன்வந்தேன்.
என்னையுன் பிள்ளையாக இரக்கமோ டேற்றுயேசு
தன்னிடம் ஒப்புவிப்பீர்; சருவ ஈசுரனின் தாயே.

1. திருவே! என்செயமணியே! திரியேகாதி
தேவனுறை ஆலயமே! சென்ம மாசில்
கருவே! என் கண்ணெளியே! கரும்பே! தேனே!
காசினியோர் கதிபெறுங்கற் பகமேயான
தருவே! பொன் சரணமலர் தஞ்சம் வந்தேன்
தாயே! நின் சேயெனெனைத் தள்ளிடாதே
மருவேபூங் கமழ்மருத மடுவில் வாழும்
மணிவிளக்கே! என்பவநோய் மாற்றுவாயே.

2. வானரும் அமரர்துதி பரவுங்கன்னி
மாமரியே! கருணைபொழி மாணிக்கம்மே!
மீனரும் முடிபுனைந்து வெய்யோன் தன்னை
மின்உடையாய் அணிந்துஇள மதிமிதித்தாய்!
நானரோ நீயாரோ வென விருந்தால்
நானிலமெற் கோர்துணைவே ருருமில்லை.
தேனரும் மருதமடுச் செல்வியே! நின்
சீதமலர்ப் பாதவருள் செய்குவாயே.

3. அன்னம்மாள் ஈன்றதவ ஆணிமுத்தே!
அந்தரித்தோர் பிணிதீர்க்கும் அருமருந்தே!
வன்னலகை மாயவலை தனிற்சிக் குண்டே
வருந்தாமல் மாமரியே! வறிய னென்னை
கன்னியர்கள் ரத்தினமே! கருணைவித்தே!
காப்பதுநின் கடனென்மேற் கடாட்சமுற்றே
அன்னையரே! அருட்சோன மாரி பெய்து
அடியேனைக் கைதூக்கி ஆளுவாயே.

4. தஞ்சமென வருமடியார்க் கடைக்கலஞ் செய்
தற்பரியே! மன்னர்குலந் தன்னில் வந்தே
நஞ்சுமிழும் பேயரவின் தலைமிதித்த
நாயகியே! உனைநினையா நாயனேன்
வஞ்சனையால் வல்வினையால் வாடிநொந்து
வந்தடைந்தேன் உந்தனர விந்தமேவு
பஞ்சினுமுன் பரிமளமே பரிவா யிந்து
பாதுசெய்து எளியேனைப் பாலிப்பாயே.

5. தேனேநற் தெள்ளமுதே! தெவிட்டா அன்பே!
திவ்யகன்னி மாமரியே! செங்கை தங்கும்
கோனேய குமரேசன் தனையிரந்தே
குள்ளகப டானவஞ்சக் கொடிய பாவி
நாளுமுந்தன் அரியதிருக் கடாட்சம்வைத்து
மானேச மோடுனது மகவாய்வாழ
நானேழை யழல்நரகுக் காளா காமல்
மாமரியே! மலர்ப்பாத வரமீ வாயே.

6. அழுதலறி ஓலமிட்டே யடிமை வந்தேன்
ஆயே! மின் னம்புலிமே லமர்ந்த பாதம்
தொழுதே யென் சென்னிமிசை தேடிநின்றேன்
சுந்தரமா தரசேயென் துயர்கள் பாவம்
முழுதுமே பொறுத்து இன்ப முத்திசேர
முன்னவனை வேண்டிமன முவந்திரங்கும்
செழுமலர்ப்பூஞ் சோலைமடுப் பதிவாழ் கன்னி
திருவடிக்கே அபயமருள் செய்கு வாயே.

7. சுடர்காலும் விடியுடுவே! சுகிர்த ஞானத்
துய்யபரி பூரணியே! தொண்டனென்னை
அடர்பவநோய் தீயவினை அணுகா வண்ணம்
அன்னையரே இன்னல்தவிர்த் தாளும் பாந்தள்
படமுடியைக் கெடமிதித்த பாத மீந்தே
பாவியெனைக் கைதூக்கிப் பாதுகாத்தே
இடரகல மடுஅன்னையே இன்று மென்றும்
என்மரண வேளையிலும் இரட்சிப்பாயே.

முத். இறப்பாயேலா மேரி

யேசுவின்திருஇருதய பணிப்பெண்கள்சபையை அடியிட்டவளான ஆசா. இறப்பாயேலா மேரிஅம்மாள் சம்பேதுருவானவர் மகாலயத்திலே சென்றவைகாசிமாதம் 18-ந்திகதியன்று முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படலாயினள். இவள் முதல் 16 வருடங்களிலும் அச்சபையின் சிரேஷ்டதாயாராயிருந்து பின்னர் தனதுசபை நன்குஸ்தாபிக்கப்பட்டதும் றோமாபுரியிலுள்ள ஓர் மடத்திலே தனது சீவியகாலத்தின் எஞ்சியபகுதியை மவுனத்திலும், ஏகாந்தத்திலும் செலவிட்டு 1925-ம்ஆண்டு பரமபதமடைந்தாள். இவள் அடியிட்டசபையின் பிரதான நோக்கம், திவ்வியநற்கருணை முன்பாகத் தினமும்செய்யும் ஆராதனையாலே யேசுவின்திருஇருதயத்துக்கு நிந்தைப்பரிகாரம் செய்வதேயாகும். தற்போது இத்தச்சபை அநேகநாடுகளில் பரந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாள் அட்டவணை

ஆனிமாதம் 1952

வெ	20	யேசு. திருஇருதயத் திரு.	(வெ)
சனி	21	அ. ஞானப்பிரகாசியார்	(வெ)
ஞா	22	இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 3-ம் ஞாயிறு — அ. பவுலீனப்பர்	(வெ)
திங	23	அ. எதில்துருத்தம்மாள்	(வெ)
செ	24	அ. ஸ்நாபகஅருளப்பர்	(வெ)
புத	25	அ. உவில்லியம்	(வெ)
வி	26	அ. அருளப்பர், சின்னப்பர்	(சி)

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
ஆனிமாதம் 19-ந் திகதி

மருதமடு யாத்திரை

மருதமடுவென்னும் மங்காப் புகழ்வாய்ந்த திருசேத்திரத்தினகண் எழுந்தருளி அருட்பிரசாத வருஷஞ்செய்துவருகின்ற கிருபாகரியான பரிசுத்த செபமாலைநாயகியின் ஆடிப்பெரியமகோற்சவம் அண்முகின்றது. அல்லும்பகலும், சகல ஆபத்து அவசியங்களிலும் கையெடுத்து, கண்களைஏறெடுத்து, அவர்சலிகையைச் சதா இரந்துவருகின்ற அவரின்பக்த கோடிகள் தங்கள் அன்புமிக்க அத்திருநாயகியின் திருப்பதிக்குத் திரள்திரளாக, தினமும் ஆயிரவர்பதினாயிரவராக யாத்திரைசெய்யும் மகாயாத்திரை காலம் அடுத்துவருகின்றது. கானகத்திடையே விளங்கும் அத்திருசேத்திரத்தின் நடுநாயகமாய், பிணியாளரின் பரம சஞ்சீவியாய், ஆதரவற்றோரின் நம்பிக்கையாய், ஆன்மசோகரியந்தரும் அருட்பிரவாகமடுவாய்ச் செமபொற் சிம்மாசனத்தின் கண்ணே, திரிலோகநாதனும் தமதுதிருக்குமாரனைச் செங்கரத் தேந்தியவண்ணமாய் வீற்றிருக்கின்ற பரிசுத்தசெபமாலை இராக்கினியின் அன்பும், அருட்பொலிவும் எடுத்துக்கூறுந் தரமேயோ? அதனால் அத்திரு அன்னையரின் பாதாரவிந்தங்களைநாடி, அவரின் சகாயத்தைத் தேடிக் கத்தோலிக்கமக்கள் மாத்திரமல்ல, பௌத்தர், சைவர், புறொட்டஸ்தாந்தர் ஆதியாம் ஏனையசமயமக்களுமே சாகியபேதம், சமயபேதம் பாராது அத்திருப்பதிக்கு யாத்திரைபோய் மாதாவைத் தரிசித்து, ஆனந்தபரவசத்தராய் அளித்துநிற்கும்காட்சி நாவால் வர்ணிக்குந்தரமேயோ? திரிபுவனங்களையும், அகிலசராசரங்களையும் படைத்துக்காக்கும்பரமனை இந்தஅவனியிற் பயந்த அமலியும், அற்புதங்களைப்புரிய வரம்பெற்றவர்களான அர்ச்சியசிஷ்டர்கள், சுத்தவாளர்களுக்கெல்லாம் பரம இராக்கினியுமான பரிசுத்தசெபமாலைநாயகி மருதமடுத் திருசேத்திரத்திற் பொழிந்துவராநின்ற அருள் மாரியை ஆடிப்பெரிய மகோற்சவம் இனிதேஎடுத்துக்காட்டப் போதியதாகுமன்றோ! அங்கண் மாதாவின் திருச்சந்நிதானத்திலே ஆனந்தக்கண்ணீர் சொரிவாரும், மனஸ்தாபக்கண்ணீர் பொழிவாரும், பெருமூச்செறிவாரும், பிழைதட்டிநிற்பாரும், மனந்திரும்புவாரும், மனஆறுதலடைவாரும், சுகம்பெறுவாரும், கேட்டவரம்பெறுவாரும், மனச்சமாதானத்தைக் கண்டடைவாரும் எத்தனைஆயிரவரென்று எடுத்துக்கூறவியலுமா? ஓ! சூரியனைத் திருஆடையாக வணிந்த மோட்சசிங்காரியே! சந்திரனைப் பாதகுறடாகத் தாங்கிய சௌந்தரவதியே! பன்னிரு உடுக்களைத் திருமுடியாகச் சென்னியிற்சூடிய பரலோக பூலோகஅரசியே! பெற்றதாயினும் மிக்கபேரன்புடையாய்! பூரணசந்திரோதயம் போன்ற தமதுதிருவதன புன்னகையையும், கருணைபொழிகின்ற தமது கண்களையும், சாந்தம்ததும்புகின்ற திருமுகமண்டலத்தையும் கண்ணுற்றபின்னும் தம்மில் அன்புபாராட்டவும், தமதுஆதரவைநாடவும், தம்முடைய திருப்பாதாரவிந்தத்தைத் தேடவும் மனங்கொள்ளாதுபோகும் மாந்தருமுளரோ? ஓ! பரமஇராக்கினியே! இந்தவேளை நாங்கள் தம்மிடங்கேட்கும் வரம்ஒன்றுள்ளது. அதாவது, பாத்திமாபதியில் தாம்காட்சியளித்துக் கேட்டுக்கொண்டபிரகாரம் நாங்கள் சிறந்தமேரையாய்ச் செபதபஞ்செய்து, செபமாலைசெபித்து, பாவிகள் மனந்திரும்பச்செய்து நீதியும், நிரந்தரமுமான உலக சமாதானத்தை விரைவிலே கண்டடையத் தயைசெய்தருள்வீராக! என்பதே.

இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்
3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(லூக். 15 : 1—10)

அக்காலத்தில் ஆயக்காரரும் பாவிகளும் யேசுநாதருக்குச் செவிகொடுக்க அவரண்டையில் வந்தார்கள். பரிசேயரும் வேத பாரகரும் முறையிட்டு: இவர் பாவிகளைத் தம்மிடத்தில் வரவிடுகிறார், அவர்களோடு புசிக்கிறாரென்றார்கள். அவர் அவர்களுக்கு இவ்வுவமையைச் சொல்லித் திருவுளம்பற்றினதாவது: உங்களில் எவனாயினும் தனக்கு இருக்கிற நூறாடுகளில் ஒன்று காணாமற்போனால், மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் காட்டில்விட்டு, சிதறிப்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமட்டும் அதைத்தேடிப் போகிறானல்லவோ? அதன் அதைக் கண்டுபிடித்தபின் களிகூர்ந்து, அதைத்தன் தோள்களின்மேற் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து, தன் சிநேகிதரையும், அயல்வீட்டாரையும் வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டை நான் கண்டுபிடித்தபடியால் என்னோடு களிகூருங்களென்று அவர்களுக்குச் சொல்லுவானல்லவோ? அவ்விதமே, தவஞ்செய்ய அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களினிமித்தம் உண்டாகும் சந்தோஷத்தைவிடத் தவஞ்செய்கிற ஓர்பாவியினிமித்தம் பரமண்டலத்தில் அதிக சந்தோஷமுண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும், பத்துத் திராக்மாஎன்னும் பணங்களையுடைய எந்த ஸ்திரீயானாலும் ஓர்திராக்மாவை இழந்தால், தீபத்தைக்கொளுத்தி வீட்டைப் பெருக்கி அதைக்கண்டெடுக்கிறவரைக்குஞ் சாக்கிரதையாய்த் தேடுகிறாளல்லவோ? அன்றியும் அதைக்கண்டெடுத்தபின், தன்சிநேகிதிகளையும் அண்டைவீட்டுக்காரிகளையும் வரவழைத்து: நான் போக்கடித்த திராக்மாவைக் கண்டெடுத்தபடியால் என்னோடு சந்தோஷப்படுங்கள் என்று சொல்லுவாளல்லோ? அப்படியே, தவஞ்செய்கிற ஓர் பாவியினிமித்தம் சர்வேசுரனுடைய சம்மனசுக்களிடத்திற் சந்தோஷமுண்டாகும்என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

சுதேச வர்த்தமானம்

தேவநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக்கோவிலிலே சென்ற 15-ந்திகதி ஞாயிறுவாரம் தேவநற்கருணைத் திருநாள் வழமைபோலப் பத்தியுருட்சிக்குரியவிதமாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்று காலை 7 மணிக்கு வண. எவ். ஜே. ஸ்ரன்னிஸ்லாஸ் சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் நம்மேற்றிராணியாண்டவர் அநேககுருப்பிரசாதிகள், குருத்துவமாணவர் சமேதராய்க் கோவிலுக்கெழுந்தருளிப் பட்டணத்தின் பலபகுதிகளிலுமிருந்து பெருந்திரளானமக்கள் தேங்கியிருந்தசமுகத்தில் வேஸ்பர்பாடியதன்மேல் கதிர்ப்பாத்திரத்தைக்கரத்தேந்தித்திவ்விய சற்பிரசாதநாதரை வீதியெழுந்தருளச் செய்தனர். பக்தர்குழாங்கள் புடைசூழ்ந்து செபங்கள்ஓதியும், திவ்வியகீதங்கள் பாடியும், புஷ்பாஞ்சலி செய்தும்நிற்க, அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிகளினூடாகச் சற்பிரசாதநாதர் திருப்பவனிகொண்டார். பரிசுத்த புதுமைமாதாகோவில் முன்றிலும், சம்பத்திரிசியார்கல்லூரிப்பெரியவாயிலிலும் அமைக்கப்பெற்றிருந்த அலங்காரமான பீடங்களிலே திவ்வியநற்கருணை எழுந்தருளச்செய்து ஆசீர்வாதம் அருளப்பெற்றது. ஈற்றிலே ஆசனக்கோவிலில் அருளப்பெற்ற ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே முடிவாயிற்று.

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆடிமாசத்தில் நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு வருகிற ஆடிமாசம் 10-ந்திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும். சங். குணவர்த்தன நீதியரசர்வந்து விசாரணைநடத்தவிருக்கின்றாரென அறிகின்றோம்.

அநாதசாலைகளுக்குப் பணஉதவி

உள்நாட்டு—கிராமாபிவிர்த்தி மந்திரிகாரியாலயமானது ஆநாதசாலைகளை ஸ்தாபிக்கமுன்வரும் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்குப் பணஉதவி செய்யவிருக்கின்றது. இன்னும் அநாதசாலைகளை ஏற்கனவே ஸ்தாபித்து நடத்திவரும் ஸ்தாபனங்களுக்குக் கொடுபடும் உதவிப்பணத்தைக் கூட்டிக்கொடுக்கவும் தீர்மானித்திருக்கின்றது. வாழ்க்கைச்செலவும் புடவைகளின்விலையும் அதிகரித்திருப்பதையிட்டுத் தங்களுக்குக் கூடியஉதவிப்பணம் கொடுபடவேண்டுமென்று இந்தஸ்தாபனங்கள் செய்துகொண்டமனுக்களைப்பற்றி ஆலோசனை செய்தபிறகு ஒவ்வோர் அநாதபிள்ளைக்கும் கொடுபடும்பணத்தை மாதம்ஒன்றுக்குப் 11 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகக் கூட்டிக்கொடுக்கவும் அது தீர்மானித்திருக்கிறது. மேலும் கொழும்புநகரிலே ஏறக்குறைய 400 அநாதர்களை அடக்கக்கூடிய முதல்அரசாங்க அநாதசாலையையும், அவ்வாறே ஒவ்வோர் மாகாணதலைநகரிலும் ஒவ்வோர் அநாதசாலையையும் ஸ்தாபிக்க எண்ணுகின்றது.

அதிகறெயில்வே வருமானம்

இலங்கை றெயில்வேக்குச் சென்ற 1951-ம்ஆண்டில் 6,59,99,474 ரூபா வருமானங்கிடைத்திருக்கிறது. இவ்வளவு பெருந்தொகைவருமானம் றெயில்வேக்கு இதற்குமுன் எப்போதாவது கிடைத்ததில்லை. சென்றவருடத்திலே றெயில்வேமூலம் அதிகமானபேர் பிரயாணஞ் செய்திருப்பதுடன் அதிகமானசாமான்கள் ஏற்றியிறக்கவும்பட்டிருக்கின்றன. என்றாலும் வருமானத்தைக் காட்டிலும் செலவு வழமைபோல அதிகரித்திருக்கிறது.

உணவுப்பொருள் இருப்பு

இலங்கையின் உணவுநிலைமை தற்போது திருப்திகரமாய் இருக்கின்றது. அரிசி, சீனி, மா, மற்றும் உணவுப்பொருட்கள் இருப்பிலே மேலதிகமாக இருந்துவருகின்றன. ஆறுவாரங்களுக்குப் போதியமாவும், இருமாதங்களுக்குப் போதியஅரிசியும், இரண்டரைமாதங்களுக்குப் போதியசீனியும் கையிருப்பாக ஏலவேதானே இருந்துவருகின்றன. இவ்வாறெல்லாம் உணவுத்தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

வைத்திய நற்சாட்சிப்பத்திரம்

நோய்காரணமாக வேலைக்குச்செல்ல முடியாதிருக்கும் அரசாங்கஉத்தியோகஸ்தர்களுக்கு நோயையிட்டு லீவுகொடுக்கும் வைத்தியநற்சாட்சிப் பத்திரங்களை அரசினர்மருந்துச்சாலைகளில் கடமைபார்க்கும் அப்போதிக்கரிமார் இனிமேல்வழங்கப்படாதெனச் சுற்றுக்கடித மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்.

வெங்காயமும் மிளகாயும்

ஈரவெங்காயம், மிளகாய்போன்ற உபஉணவுப்பொருட்களை வடமத்திய மாகாணத்திலே பெருமளவில் செய்கைபண்ணுவதற்கான புதியதிட்டம் ஒன்றை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதன்படி இவைகள் அங்கு பெருந்தேசப்பரப்பிலே வேகமாகச் செய்கைபண்ணப்படும். தற்போது இலங்கையில் செலவாகும் ஈரவெங்காயத்தில் ஏறக்குறைய அரைவாசியும் இங்கேயே செய்கைபண்ணப்படுவதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. இப்போதைய பெருக்கத்திலே அதன் செய்கை அதிகரித்துவருமாயின் இன்னும் மூன்றுவருடத்தில் இலங்கைக்குத் தேவையான வெங்காயம்முழுவதையும் இந்நாட்டிலேயே விளைவித்துக் கொள்ளலாமென மதிப்பிடப்படுகிறது. அவ்வாறு விளைவித்துக்கொண்டால் உணவுப்பொருட்களை வாங்குதற்கென்று பிறநாடுகளுக்குச்செல்லும் பணத்தில் 90 லட்சமுதல் ஒரு கோடி ரூபாவை இந்நாட்டிலேயே நிறுத்திவைத்துக் கொள்ளலாம்.

அக்கராயன் குளத்திட்டம்

அக்கராயன்குள நடுத்தரவகுப்புக் குடியேற்றத்திட்டத்தின்கீழ் காணி கேட்பவர்களின்தொகை மிகஅதிகமாயிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் காணிகளுக்கு மனுச்செய்துகொண்டமலாய்நாட்டுப் பென்ஷன்காரர்களாலும், மற்றும் நடுத்தரவகுப்பைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தவராலும் சமீபத்திலே யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள யாழ்ப்பாணக்கருமாதிகாரியின் வளவு தேங்கிப்போயிருந்தது. சமீபத்திலேயே திருத்திப் புதுக்குவிக்கப்பட்ட அக்காயன்குளம் முறிகண்டிப் பிள்ளையார்கோவிலிலிருந்து மேற்கே ஏறக்குறைய ஐந்துமைல் தூரத்திலுள்ளது. இக்குளத்தையடுத்தநிலம் அதிகம் செழிப்புள்ளதென அறியப்படுவதாலும், யாழ்ப்பாணத்துக்குச் சமீபமாக இருப்பதாலும் பலரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்து கொண்டிருக்கின்றது. இப்போது 750 ஏக்கர் முடிக்குரிய காட்டுநிலமே உதவப்படவிருக்கிறது. பிறகுகுளத்துநீர் அதிகமாக்கப்பட்டுக் கூடியநீர்ப்பாய்ச்சுவசதிகள் செய்யப்பெற்றதும் மேலும் அதிகநிலப் கிடைக்கக்கூடியதாயிருக்கும். இந்தக்குளம் பூரணமாகத் திருத்தப்படுமிடத்து 15,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சக்கூடியதாகுமென நம்பப்படுகிறது. இந்தக்குளத்தையடுத்த காணிகள் அபிவிர்த்திசெய்யப்படுமிடத்து, இரணைமடுத்திட்டத்தின்கீழ் ஏலவே அபிவிர்த்திசெய்யப்பட்டுள்ள காணிகளுடன் சேர்த்து, மிகப்பரந்த நெற்காணிகளாய் விளங்கும். மலாய்நாட்டுப் பென்ஷன்காரரை அடக்கிய ஐக்கியகமக்காரர் சங்கமானது இத்திட்டத்தின்கீழ் காணிகளுக்கு மனுப்பண்ணியிருக்கின்றது. இந்தச்சங்கம் காணி அபிவிர்த்திசம்பந்தமாய் இக்காலமாதிரியான நவீன சாதனங்களைக் கையாண்டு கூட்டுறவு முறையிலே கமச்செய்கை நடத்தவிருக்கின்றது.

தேர்தல் விசாரணைமனுக்கள்

சமீபத்தில்நடந்தேறிய பொதுத்தேர்தலிலே பாராளுமன்றப் பிரதிநிதிகளாகத்தெரியப்பெற்றுள்ள பத்துப்பேர்களின் தேர்தல் முறைகேடானதென ஆட்சேபித்து அவற்றைத்தள்ளிவைக்குமாறு சென்ற செவ்வாய்க்கிழமைவரையிலே பத்துமனுப்பத்திரங்கள் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்பிரதிநிதிகளின்தொகுதிகளும், நாமங்களும் வருமாறு:

1. திரு. போர்னுட் அலுவிகாரை—மாத்தளைப்பிரதிநிதி.
2. திரு. அல்பிறெட் எவ். பீரிஸ்—(சபாநாயகர்) நாத்தாண்டியா.
3. திரு. பி. ஏ. குறே—கழுத்துறை.
4. திரு. எஸ். எம். இராசமாணிக்கம்—பட்டிருப்பு.
5. ஜனுப் எம். எம். இபிருஹிம்—பொத்துவில்.
6. திரு. ஈ. எல். சேனநாயக—கண்டி.
7. திரு. ஆர். பி. கதிர்காமர்—மட்டக்களப்பு.
8. ஜனுப் ஏ. எம். மிர்சா—கல்முனை.
9. திரு. ஏ. என். டி. எ. அபெயசிங்க—நீர்கொழும்பு.
10. திரு. டபிள்யு. ஜி. மொண்ரகு ஜயவிக்கிரம—வெலிகம.

கைலஞ்சம்கொடுத்தல், தகாதமுறையில் செல்வாக்கைப் பிரயோகித்தல், பெயர்கள், விலாசங்களின்றித் துண்டுப்பிரசுரங்கள் ஆதியவற்றைப் பரப்புதல் முதலாம் பல்வேறுகுற்றச்சாட்டுகளும் இவர்கள்மேல் மனுப்பண்ணியவர்களால் சுமத்தப்பட்டிருக்கின்றன.

களவில்வந்த சாமான்கள்

2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்குமேற் பெறுமதியான சாமான்களைக் களவிலேகொண்டுவந்த கட்டுமரம் ஒன்று சென்றஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறையிலிருந்து இரண்டு மைமல் தூரத்திலுள்ள கற்கோவளக் கரைக்கப்பால் தடைஅதிகாரி திரு. தம்பையா அவர்கள் தலைமையில் சென்ற துறைமுகஅதிகாரிகளால் கைப்பற்றப்படலாயிற்று. கைப்பற்றப்பட்டசாமான்களில் கஞ்சா, அபின், பிஸ்கோத்தகரங்கள், புடவைகள், குடைகள்ஆதியனவும் இருந்தன. வி. தில்லையம்பலம் என்பவர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். கட்டுமரம் துறைமுக—பொலிஸ்காவலில் இருந்துவருகிறது. கைப்பற்றப்பட்ட அபின்மாத்திரம் 192 றுத்தலென்று சொல்லப்படுகிறது. அன்றிரவுதானே தொண்டைமானாற்றுக்குச் சமீபமாக பீடிப்புகையிலைமூட்டைகளை இறக்கிக்கொண்டிருந்த ஓர் மோட்டார்வள்ளமும் பிடிக்கப்பெற்று அதிலே 71 மூடைபீடிப் புகையிலைஇருக்கக் கண்டறியப்பட்டதாகத்தெரியவருகிறது மோட்டார்வள்ளம்பிந்தஊர்காவற் றுறைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

நல்லூர் மீசாம்

சந்தி

சந்தி:— நாலாபக்கத்திலுமிருந்து தெருக்கள்வந்து ஒன்றுசேருமிடத்தையே சந்திஎன்பார்கள். பெரும்பாலும் மூன்றுதெருக்களே ஒன்றுசேரும். ஆகவே, தெருச்சந்திகளை முச்சந்தியென்பது வழக்கம். நான்கு தெருக்கள் சந்திக்குமிடத்தை நாற்சந்தியென்று அழைத்தாலும் பலர் நாலுமுச்சந்தி என்பார்கள். யாழ்ப்பாணத்தில் ஓர்இடமுண்டு. இங்கே ஐந்து தெருக்கள்வந்து சந்திக்கின்றன. பலர் இதை ஐந்துசந்தி என்பார்கள். வேறு பலர்இதை ஐந்துமுச்சந்தி என்பார்கள்.

மானிப்பாயிலும் சந்தி ஒன்று உண்டு. இதை அங்குள்ளோர் பலசந்திஎன்று அழைப்பதுவழக்கம். இச்சந்தியிலே வந்துசந்திப்பது தெருக்கள்மாத்திரமல்ல. ஆனல், பஸ்வண்டிகளும்வந்து இங்கேசந்திக்கின்றன. அவைகள் பலவிடங்களிலுமிருந்து இங்கேவந்து சந்திக்கின்றன. சரியாய்ச் சொன்னல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலகோணங்களிலுமிருந்து புறப்படும்பஸ்கள் இங்கேவந்து சந்திக்கின்றன. பருத்தித்துறையிலிருந்து தொண்டைமானாறுவழியாகப் பிரயாணம் செய்யும்பஸ், சாவகச்சேரியிலிருந்து புத்தூர்வழியாகப் பிரயாணஞ்செய்யும் பஸ், யாழ்ப்பாணம், இளவாலை, ஊர்காவற்றுறை ஆதியாம்இடங்களைத் தங்கள் அந்தங்களாகக்கொள்ளும் பஸ் ஆதிய இவையெல்லாம் இங்கேவந்து சந்திக்கின்றன. இன்னும்பல இருக்கக்கூடும். இவையெல்லாவற்றையும் ஞாபகத்தில் கொள்ளக்கூடுமா? அக்காலத்தில் எல்லாவீதிகளும் றோமைக்குச் செல்லுகின்றன என்றதுபோல், இப்போது எல்லாவீதிகளும் மானிப்பாய்க்குச் செல்லுகின்றன எனலாம்.

இச்சந்தி பலசந்தியோ அல்லது பலர்சந்தியோ என்று அன்றொருநாள் எம்மிடம் ஒருவர்வினவினர். ஏன் அப்படிக் கேட்கிறீர்என்றதற்கு: "பாருங்கள்சுவாமி, இது பலரும்வந்து ஒருங்குகூடும்தலமாகிவிட்டதல்லவா." என்றனர். யாழ்ப்பாணத்தின் எந்த மீசாம், எந்தக் கிராமத்திலிருந்துதான் இங்குசனங்கள்வந்து ஒருங்கு கூடவில்லை சென்றமாசத்தின்முதற்செவ்வாயன்று யாழ்ப்பாணப் பட்டணத்திலிருந்தோ, சாவகச்சேரி, மிருசுவிலிலிருந்தோ, புலோலி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறையிலிருந்தோ, இளவாலை. மாதகல், சில்லாலையிலிருந்தோ, நாரந்தனை, ஊர்காவற்றுறையிலிருந்தோ, இடையிலுள்ள சில்லறை மீசாங்களிலிருந்தோ சனங்கள்வந்து ஒருங்கு கூடினர்கள் அல்லவா? ஓர் சாதாரண முதற்செவ்வாயன்று இவ்விதம் நாலுபக்கங்களிலுமிருந்து பக்தர்கள் ஒருங்குகூடுவார்களாயின் திருநாள்தினத்தில் என்ன வாய்த்தான் இருக்கப்போகின்றது? நோவனைகள் 13-ந் திகதி ஆரம்பமாகிவிட்டன. 21-ந் திகதி மேற்றிராணியாண்டவர் வேஸ்பர்பாடுவார். 22-ந் திகதிகாலை 7-15 மணிக்கு அவரே திவ்வியபூசை நிறைவேற்றியபின் புதிய ஆலயத்தை அடியிடுவதற்கு அஸ்திவார முதற்பொழியை வெட்டிக் கோவில்திருப்பணியை ஆரம்பித்துவிடுவார். இத்தினத்துக்குவேண்டிய பல ஆயத்தங்களும் பரபரப்பாய் நடைபெறுகின்றன. இவையெல்லாவற்றையும் ஆராய்வாகக் கவனிக்குமிடத்து, இவ்விடத்தைச் சந்திஎன்றல்ல, பலசந்திஎன்றல்ல, பலர்சந்திஎன்றல்ல, ஆனல், பதுவை அந்தோனியார் பாதத்தில் பலரும்சந்திக்கும் பலசந்தி என்றல்லவா சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

நல்லூர்மீசாமின் பலகோவில்களிலுமிருந்து [illegible] கள்போய்ச் சந்திக்குமாப்போல் சந்திக்குமிடம் இது. ஏனெனில், இவர்கள்எல்லோருக்கும் பொதுப்பிதாவாகிய பெரியசுவாமியார் வண. ஞானப்பிரகாசர் சுவாமியார் பிறந்த ஜனனபதி இது. அவர் மரித்தபதியும் இதுஅல்லவா! நல்லூர்மீசாமின் நண்பர்கள், அனுதாபிகள், உபகாரிகள், அபிமானிகள் இங்கேவந்து ஒருங்கு கூடுவார்கள். இவர்களுக்கு இம்மீசாமின் நீண்டதொடர்பினநிமித்தம் இது ஒருபரிசுத்தபூமி ஆகிவிட்டது. இவையெல்லாவற்றிலும் அத்தருணத்தில் தேங்கிநிற்பவர்கள் அர்ச். அந்தோனியாரின் பக்தர்களே. இப்பதியிலே அர்ச். அந்தோனியார் எழுந்தருளி இப்போது ஆறுவருடங்கள் மாத்திரமே. இச்சொற்பகாலத்துள் அர்ச். அந்தோனியார் தமக்கெனப் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைச் சேகரித்துக்கொண்டார். இவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக் குட்பட்டவர்கள் மாத்திரமல்ல. ஆனல், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திரிகோணமலை, புத்தளம், சிலாபம்ஆதியாம் இடங்களிலுமிருந்து பக்தர்கள்பலரும் அவர் சலிகையைக் காகிதமூலமாய் நாடுகின்றனர். இவர்களில் ஒருபாலாரென்கிலும் இங்குவந்து ஒருங்குகூடுவார்கள். ஆனிமாசம் 22-ந் திகதி அர்ச். அந்தோனியார் இவர்கள்எல்லோரையும் அதிவிசேஷவிதமாய் ஆசீர்வதிப்பாராக.

ஓடர் அனுப்புவது:

Sub-Post office,
NALLUR.

விலாசம்:

Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

புதிய செனற்றர்கள்

பொதுத்தேர்தலிலே பாராளுமன்றஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாகப் போட்டியிடுமாறு செனற்சபைப்பதவியிலிருந்து இராசிநாமாச்செய்துகொண்ட சேர் ருஸிக் பரீத், மேஜர் சி. ஏ. தர்மபாலா, டக்றர் ஈ. எம். பி. நாகநாதன் என்பவர்களுக்குப் பதிலாகச் செனற்சபைப் புதியஅங்கத் தவர்களாய்த் திரு. பி. ஐ. பாலிப்பான, திரு. அன்ட்று சமரசிங்க, திரு. எச். எல். றட்வத்தை ஆகியமூவரும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையாலே சென்ற செவ்வாய்க்கிழமை தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார்கள்.

புஷ்பக் குண்டுகள்

தேவதாயார் மூன்று இடைப்பிள்ளைகளுக்கும் முதற்காட்சி அருளிய 35-வதுவருட நிறைவு விழா சென்றவைகாசிமாதம் 13-ந்திகதி கொண்டாடப்பெற்றபோது முப்பதுபட்டாளவிமானங்கள் பாத்திமா திருசேத்திரத்தின்மீது புஷ்பமாரிபொழியலாயின. பிரலபயானசூரியப் பிரகாசத்திலே வெளிமைதானத்தில் ஐம்பதினுயிரம்பேருக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் திவ்வியபூசைகண்டார்கள். தேசமுழுவதிலுமிருந்து பாத்திமா நாயகியின் சலிகையைத்தேடி அநேகநோயாளர் வந்திருந்தார்கள். ஈறுந்தசற்பிரசாதசுற்றுப் பிரகாரத்தின்போது இராணுவ காவற்படைஒன்று திவ்வியநற்கருணையைச்சூழவரப் பரிவாரமாகச்சென்றது.

குருசடித்தீவு

அர்ச். அந்தோனியார் திருநாள்

இத்திருநாள் வருகிற சனிக்கிழமை சாயந்தரம் வேஸ்பர் ஆராதனையுடனும் அடுத்தநாள் (22.6-52) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குப் பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவாகும்.

எஸ். ஏ. ஞானப்பிரகாசம்
மண்டைதீவு கட்டளைக்குரவர்

டேமியன் பாதிரியாரின் திருப்பணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையைக்கண்டு சுவாமியார் பரிதபித்தார். அவர்களின் உடலில் இருந்த புண்ணினுலும், சதையழிவினுலும் உண்டாகும் நாற்றம், அருவருப்புப் பொறுக்க முடியவில்லை. அவர்களண்டையிருந்த மனச்சோர்வு, நம்பிக்கையின்மை சுவாமியாரைத் திகைக்கவைத்தது. ஆயினும், தன்மனத்தைத் தளரவிடாது தனது ஊழியத்தை மனப்பூர்வமாகச் சந்தோஷத்துடன் தொடக்கினர். தனக்கு ஒரு குடிசை கட்டும்வரை ஒரு பெரியமரத்தடியில் வசித்துவந்தார். அதுதான் அவர் வீடு. அதுதான் அவர் படுக்கும் இடம். மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாது, அருமையும் பாராது, அவமதிப்பும்கொள்ளாது, கருமத்திலேயே கண்ணுய் இருந்து இந்தஇடத்தில் மும்முரமான வேலையைத் தமியான் சுவாமியார்தொடங்கினர். குஷ்டரோகிகளைக்கண்டு அருவருக்காமல் அவர்கள்மேல் நமதாண்டவர் எவ்விதஅன்புவைத்தாரோ அதேஅன்புடன் அவர்களை நேசித்தார்.

காலையில் எழுந்ததும் அவர்களின் புண்களைக் கழுவுவார். பின் அவர்களின் உதவியோடு அவர்கள் வசிப்பதற்கு வீடுகள் கட்டிக்கொடுத்தார். நல்லபூந்தோட்டம் உண்டாக்கி அதன்மூலம் அவர்களை மகிழ்வித்தார். அவர்களும் மனிதப்பிறவிகள் என்ற உணர்ச்சியைத் திரும்பவும் அவர்கள் மனதில் கொண்டுவந்தார். முன்பு இவர்களுள் இறப்போரை ஏதாவதுகிடங்கில் தள்ளிவிட்டு வருவதுவழக்கம். ஆனல், தமியான்சுவாமியார், அவர்களுக்குத் தானே சவப்பெட்டிசெய்து, தானேசவக்குழிதோண்டி, பாட்டுகளுடன் மரியாதையாய் அடக்கம்பண்ணுவார். இந்தவழக்கத்தை நடைமுறையில் கொண்டுவந்தபடியால், தமியான் சுவாமியாரே தனது கையினல் அநேக சவப்பெட்டிகள் செய்யவேண்டியிருந்தது. அநேக சவக்குழிகள் தோண்டவேண்டியிருந்தது. இவ்விதம்பறபலதொண்டுகள்—படிப்பித்தல், பாட்டுப்பழக்குதல், யேசுக்கிறீஸ்துவின் அன்பைப்பற்றிச் சொல்லுதல், கடவுள்பக்தியை உண்டுபண்ணல், சுத்தமாய்ச் சீவிக்கப்பண்ணல், தேவாலயங்களில் ஒழுங்காக ஆராதிக்கப்பழக்கல் முதலிய தொண்டுகள் புரிந்தார். (தொட.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசு என்வாழ்வின் ஒளி

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

............பிள்ளாய்! உன்னைப்பற்றி ஊரெல்லாம் ஏதேதோ பேசுகிறதே. பாவம்! நீ என்ன செய்வாய்? யார்தான் தவறுசெய்யாமல் இருக்கிறார்கள்? ஆனால், அந்தத்தவறை உணர்ந்து துக்கப்படுபவன்தான் மனிதன். அவனுக்குத்தான் இரட்சணியமும்உண்டு.........'' குருவானவர் பேசிக்கொண்டேபோனார். என்கண்கள்கண்ணீரைச் சொரிந்தன. அவ்வேளை பெய்தமழைபோல எனது காதல்வாழ்க்கைக்குப் பின் ஒருவராவது என்னோடு இவ்வளவு அன்பாகப் பேசியதே கிடையாது. தவிர, நான் செய்தது என்தவறுதான் என்றும் எண்ணியது கிடையாது. பாவி! இப்படிச்செய்தானே; என் மானம் போய்விட்டதே என்றுதான் கவலைப்பட்டேன். குருவானவரின் பேச்சு என் அகக்கண்ணைத் திறந்தது. கடவுளைப்பற்றிச் சிந்திக்காதபோது, நாம்செய்யும் குற்றங்களும் குற்றங்களாகப்படுவதில்லை—என்மனம் மேற்படிசிந்தனைகளில் ஆழ்ந்திருந்தது. குருவானவர் பேசுவதை நிறுத்திவிட்டு என்னைப்பார்த்துக் கொண்டே நின்றார். சிறிதுநேரம் நிசப்தம் நிலவியது. நான் நிசப்தத்தைக்கலைக்கப் பேசினேன். ''சுவாமி! இவ்வளவுகாலமும் நான் செய்தது தவறாகப்பட்டாலும் அதற்கு நான் பொறுப்பாளியல்ல; அந்தச்சண்டாளனே பொறுப்பாளி என்று எண்ணியிருந்தேன். ஆனால், இன்றுதான் என்னிலும் தவறு இருக்கிறது என்று உணருகிறேன்.''

வெளியிலே மழைநின்றுவிட்டது. சுவாமியார் சொன்னார்: ''நாளை ஞாயிற்றுக்கிழமை நீ கோவிலுக்குவா. பூசை முடிந்தபின் என்னைக்காண்'' என்றார்.

கோவில்! எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின் அந்தச்சொல்லைக் கேட்பது. நான் கத்தோலிக்க பெண் அல்ல. எனக்குச் சமயமேகிடையாது. என் பெற்றோர் கத்தோலிக்கர் அல்ல. ஆனால், அவர்கள் வழிபாடெல்லாம் வெறும பித்தலாட்டங்கள் என்று கருதி அவர்களைக் கேலிசெய்வேன். இதிலும் ஒருபடி முன்னேறி ''மதம் மக்களின் அபினி'' என்றுகூட மேற்கோள்காட்டுவேன். இவைகள்தான் என்பாதாளப் பிரயாணத்திற்குக் கால் என்பதை அப்போதெல்லாம் நான் சிந்திக்கவில்லை. எப்போதும் கெட்டவைகளைத்தான் அதிகம்விளம்பரம் செய்வார்கள். நல்லவைகளுக்கு ஏன் என்ற பாராமுகம்தான் காரணம். ஆனால், இங்கேதான் தவறு இருக்கிறது. இந்தத்தவறு பெரிய அழிவுகளுக்குக் காலாக இருக்கிறது. துர்ப்பிரசாரங்கள் மனிதரிடையே பாவித்தப்பபிப்பிராயங்களை உண்டாக்கி வருகின்றன. இவைகளாற்றான் ''வேதம் வெறும்பித்தலாட்டம்'' என்று நான் எண்ணியிருந்தேன்...... போல் இருந்தது. கோவிலுக்குப் போக எனக்குமனமில்லை. ஊரார் என்ன சொல்வார்கள்? ஆனாலும், அந்தச்சுவாமியாரின் வேண்டுகோளைத் தட்ட என்னால்முடியவில்லை. என்ன நடக்கிறதுபார்ப்போமே என்று முடிவு செய்தேன். சுவாமியாரை வழியனுப்பினேன்.

மறுநாள் நான் கோவிலுக்குப் போனேன். என்மனம் ஏதோ விசேஷ கருமம் ஒன்றை எதிர்பார்த்திருந்தது. ஒருவிதவெட்கத்தோடு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டேன். கோவிலுக்குள் இருந்தவர்களெல்லோரும் ஒருமுறைஎழுந்து சிறிதுநேரத்திற்குப்பின் உட்கார்ந்தார்கள். சுவாமியார் போதிக்க ஆரம்பித்தார்: வாழ்வில்எல்லோரும் தவறுசெய்வதுசகசம். இதை நாம் நமதுஇரட்சகர் யேசுபெருமானின் சீவியசரித்திரத்திலிருந்து அறியலாம்'' என்று ஆரம்பித்து யூதர் யேசுவைச்சோதிக்க விபசாரி ஒருத்தியை அவர்முன் நிறுத்தி அவள்மீது கல்வீசவிடைகேட்ட சம்பவத்தையும், அவர் ''உங்களில் பாவம்செய்யாதவன் முதல் கல்லை எறியட்டும்'' என்று கூறியதையும்பற்றிப் பிரசங்கித்தார். கடைசியில் எல்லோரும் தவறுசெய்கிறார்கள். ஆனால், தவறைஉணர்ந்து துக்கிப்பவர்களுக்குமட்டும் இரட்சணியமுண்டு. தவஞ்செய்யுங்கள். அப்போது இரட்சணியம் உண்டாகும்'' என்று முடித்தார்.

யேசு! இந்தவார்த்தை என் இருண்ட வாழ்வின் ஒளியானது. முன்னெல்லாம் புத்தர், முகமது இவர்களைப்போல் யேசுவும் ஒருவர்என்று மட்டும்தான் அறிந்திருந்தேன். ஆனால்இப்போது—குருவரின் பிரசங்கத்தைக் கேட்டபின்—யேசுவைப்பற்றி அதிகம் அறிய வேண்டுமென்ற ஆவல்உண்டானது. பூசைமுடிந்ததும் குருவானவரைக் கண்டு யேசுவைப்பற்றி ஏதாவது புத்தகமிருந்தால் தரும்படிகேட்டேன். அவர் ''புதியஏற்பாடு'' என்ற புத்தகத்தையும் ''அர்ச்சியசிஷ்டவாரம்''என்ற நூலையும் கொடுத்தார். புதியஏற்பாட்டில் ஒரு அத்தியாயத்தை ஒரு இரவுக்குவாசி; மற்றப்புத்தகத்தை ஓய்வானநேரத்தில் படித்துக்கொள். படித்தால்போதாது. சிந்தனைசெய். யேசுபெருமான், அவரே சொன்னதுபோல நோயாளிக்குத்தான் வைத்தியனாக வந்தார்; பாவிகளைப் பரகதிசேர்க்கத்தான் அவர் பாடுபட்டார்'' என்று சொல்லிவிட்டார்.

அந்தஇரண்டு புத்தகங்களும் எனக்கு ஞானவெளிச்சத்தை உண்டாக்கின. நான் தொடர்ந்து அநேக கத்தோலிக்க நூல்களைக் கற்றேன்; சிந்தித்தேன்.

இப்பொழுதும் ஊரார்என்னை விபசாரிஎன்றுதான் எண்ணுகிறார்கள். நான் அதைப்பற்றிக் கவலைப்படுவது கிடையாது. உலகில் என்னநடக்கிறது என்பதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. யேசுஎன்னில் வசிக்கிறார். நான் அவரில்சீவிக்கிறேன். நான் கிறீஸ்தவள். இதுதான் என்மகிமை; என்பெருமை.

ஒன்றுசொல்ல மறந்துவிட்டேன். நான் அவமானச்சின்னமாகக் கருதிய என்சிசு இப்போது பாடசாலைக்குப் போகும் சிறுவன்.

[ஜீ. கே. செஸ்ரேட்டன் எழுதிய ஒரு கவிதையின் மொழிபெயர்ப்பு.]

உங்களுக்குத் தெரியுமா?

1. 1869-ம் ஆண்டுமுதல் 1870-ம் ஆண்டுவரையில் நடந்தேறிய வத்திக்கான் மகாசங்கம் எக்காரணத்தைமுன்னிட்டு விசேஷ ஞாபகத்துக்குரியதாகும்?

பாப்பாண்டவரின் தலைமையையும், தவறாவரத்தையும் அது திருச்சபைச் சட்டபூர்வமாக நிர்ணயித்தகாரணத்தை முன்னிட்டேயாகும்.

2. மிக்கேல் ஆஞ்சலோ எனும் பேரானசிற்பியின் கைவன்மையைக் காண்பிக்கும் சிறந்த சான்றுகளில் ஒன்றுயாது?

இரண்டாவதுஜூலியஸ்எனும் பாப்பானவர் மோயீசனின்சுரூபத்தைச் செய்ய இந்தப்பேரானசிற்பிக்கு அனுமதியளித்தார். அப்பேருபகாரத்திற்காக இந்தச்சிற்பி அப்பாப்பானவரின் உருவத்தையே அச்சுரூபத்தின்தாடியில்அமைத்துவிடலாயினர்.

3. திரு. ஸ்ரீபின் நாராயணன்என்பவரைப்பற்றிய வரலாறுஎன்ன?

இவர் கிறீஸ்துசமயத்தைக் கைமேற்றுக்கொண்டபின் மூத்த ஓர்அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்த கிறீஸ்தவராயினர். அதன்மேல் ஓர்புரொட்டஸ்தாந்த போதகராகவேண்டித் தமது சமயசாஸ்திரகல்வியைத் தொடர்ந்து படிப்பதற்காக இலங்கையிலிருந்து கல்கற்றாநகர் சென்றார். அங்கு தியாக்கோன்பட்டம் பெற்றபின் அங்கிளிக்கன் சந்நியாசர்களான (The Cowley Fathers) ஓர்குழுவினரின்கீழ் பணியாற்றுதற்கெனப் பூனாநகர்சென்றார். இவருடையநண்பரான டக்றர் எச். சி. ஈ. சக்கரியாஸ்அவர்கள் அதிகம் ''உயரிய'' அங்கிளிக்கனவர். அப்போது பூனாநகரில் வசித்திருந்தார். 1926-ம் ஆண்டு கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்வதற்காக அங்கிளிக்கன் சபையை விரைவிலேகைநெகிழ்ந்தார். ஏலவே தமதுநிலைமையைவிட்டுச் சந்தேகங்களால் அல்லற்பட்டுக்கொண்டிருந்த திரு.நாராயணனுக்குஇதுநல்ல பாடமாயிற்று. தமதுமனைவியாருடன் மனந்திரும்பி 1928-ம் ஆண்டு கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்துகொள்ளலாயினர்.

4. முப்பத்தைந்துஎனும் இலக்கத்துடன் சம்பந்தப்பட்டனவாய் இவ்வருடத்திலே திருச்சபையில் நிகழ்ந்துள்ள இருசம்பவங்கள்எவை?

(1) ஸ்பானியதேச பார்சலோனாநகரிலே 35-வது சர்வதேச சற்பிரசாத மகாநாடு நடந்தேறியிருப்பதும், (2) பாத்திமாதிருப்பதியிலே தேவமாதா மூன்றுபிள்ளைகளுக்கும் முதற்காட்சியருளிய 35-ம் வருட நிறைவுவிழா அப்பதியிலே கொண்டாடப்பட்டிருப்பதுமாகும்.

5. பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராகிய அர்ச். யூதாவைப்பற்றிச் சுருக்கமாகச்சொல்லக்கூடியதென்ன?

அர்ச். யூதா அல்லது தாடியஸ் என்று அறியப்படுகிறவரான இவர் அர்ச். சின்னயாகப்பரின் சகோதரராய்இருந்தாரென்று கருதப்படுகின்றார். தமதுநாமத்தைத்தாங்கிய நிருபத்தை இவர் எழுதியிருக்கின்றார். இவர்திருநாள் ஐப்பசிமாதம் 28-ந் திகதி கொண்டாடப்படுகிறது. இனிமேல் நம்பிக்கையில்லை எனப்படும் அசாத்தியமான காரியங்களைக் கைகூடப்பண்ணுவதிலே அர்ச். யூதா பெரிதும் பிரஸ்தாபம்பெற்றவர்.

6. ''சுதந்திரம்'' என்பதில் அடங்கிய மூன்றுசுதந்திரங்களும் எவை?

பேச்சுச்சுதந்திரம், கடவுள்வழிபாட்டுச்சுதந்திரம், தொழில்துறை சம்பந்தமான சுதந்திரம்என்பனவே.

7. சென்ற பொதுத்தேர்தலின் போது இலங்கையிலுள்ள பல்வேறு அரசியற்கட்சிகளின் தலைவர்கள் எந்தெந்தச்சின்னங்களைத் தங்களுக்குத் தெரிந்துகொண்டார்கள்?

(1) திரு. டட்லி சேனநாயக (ஐ. தே. கட்சி) யானை. (2) திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக (சுதந்திரகட்சி) யானை. (3) டக்றர் என். எம். பெரேரா (ல. ச. ச. கட்சி) வீடு. (4) திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (த. கா. கட்சி) குடை. (5) திரு. எஸ். ஜே. பி. செல்வநாயகம் (சமஷ்டிக்கட்சி) பைசிக்கிள். (6) திரு. வில்மட் பெரேரா (குடி. கட்சி) திறப்பு. (7) திரு. ஏ. ஈ. குணசிங்க (தொழிற்கட்சி) பைசிக்கிள். (8) சேர் ராஸிக் பரீத் (சோனகர்) திறப்பு. (9) டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்க (கம். கட்சி — ல. ச. ச. கட்சி) நட்சத்திரம். (10) டக்றர் ஏ. பி. டி சொய்சா (புத்த குடி. கட்சி) கை.

நானாசங்கதிகள்

—தொமினிக்குவின் சபையைச் சேர்ந்த சதாசெபமாலைசொல்லும் கன்னியாஸ்திரீமாராலே பாத்திமாபதியில் ஓர் கன்னிகாமடம் திறக்கப்பட்டிருக்கிறது. தங்கள்சபை ஒழுங்கின்படி, இவர்கள் இரவுபகலாகச் செபமாலை சொல்லிக்கொண்டிருக்கக் கடமைப்பட்டவர்கள். இந்தமடம் பாத்திமா மகாலயத்திலிருந்து முக்கால்மைல் தூரத்திலுள்ளது.

—சிறைவைக்கப்பட்டிருக்கும் ஹங்கேரியதேச திருச்சபை அதிகாரியான கருதினால் மின்ட்சென்ரி ஆண்டவர் துன்புறுத்தப்பட்டதையும், விசாரணை செய்யப்பட்டதையும் எடுத்துக்காட்டும் ''தேசதுரோகம்''என்ற சினிமாப்படமானது லண்டன்நகரிலே சென்ற வைகாசிமாதம் 12-ந்திகதிமுதல் ஆறு தினங்களாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

—நியூயோக்நகர் அதிமேற்றாணியாரான கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவர் யுத்தகாலத்திலே நேசதேசங்களுக்கு ஆதாவளித்து ஆற்றியசேவைகளைப்பாராட்டிப் பெல்ஜிய அரசாங்கம் பெல்ஜிய முடிக்குரிய மகிமைவரிசையின் பெரியசிலுவைச் சின்னத்தை அவருக்குச் சந்மானித்திருக்கின்றது. இந்தச்சின்னம் வாஷிங்ரன்நகரிலுள்ள பெல்ஜிய ஸ்தானீகர் காரியாலயத்தில் வைத்துச் சமீபத்திலே அவரிடம்சமர்ப்பிக்கப்படலாயிற்று.

—சமீபத்திலே யப்பான் சுதந்திரமடைந்தபின் அதனிடமாக அமெரிக்கவாசின் முதலாவது ஸ்தானீகராகத் திரு. றொபேட், மேர்பி எனும் கத்தோலிக்கபிரமுகர் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். முன்னர் பெல்ஜியத்திலே அமெரிக்க ஸ்தானீகராக இருந்துவந்தவரும், தற்போது 57 வயசுடையவருமான இவர் இதுவரை அமெரிக்க இராச்சியமந்திரியாரான திரு. டீன்அச்செஸன் அவர்களின் விசேஷ ஆலோசகராய் இருந்துவரலாயினர்.

—வத்திக்கானிடமாக நியமனம் பெற்ற முதலாவது சீனப்பிரதிநிதியான டக்றர் சியோ காங்சியே அவர்களின் புதல்வர்களான சாள்ஸ்சியே, ஜோண் சியே எனுமிருவரும் மனந்திரும்பி அமெரிக்கஐக்கியதேசஸ்ராற்றென் தீவிலுள்ள அமலோற்பவநாயகியின் ஆலயத்திலே சமீபத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்காகியிருக்கின்றார்கள். அவ்வேளை அவர்களின் பெற்றோர் அங்குசமுகமாயிருந்தார்கள்.

—பெல்ஜியதேசத்திலே திருஇருதய ஆண்டவர்போல் கட்டியெழுப்பப்பட்டுவருகின்ற பஸிலிக்காஎனும் மகாலயத்தைப் பூர்த்திசெய்வதற்கான நிதிசேகரிப்பதற்கென்று பெல்ஜியஅரசாங்கம் மூன்றுஇனப் புதியதபால்முத்திரைகளைப் பாவனைக்குவிடுத்திருக்கின்றது. மேலும் கருதினால்மார் திருச்சங்கத்திலே ஓர் பெல்ஜியகருதினாலாக இருந்துவருகின்ற கருதினால் வான்றோய்ஆண்டவர் கருதினாலாக்கப்பெற்ற 25 வருடநிறைவுவிழாவையும் இந்தத் தபால்முத்திரைகள் ஞாபகப்படுத்துவனவாகும்.

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந் திகதி பிற்பகல் 5 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். ஆடிமாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள் பின்வருமாறு:— 2, 8, 9, 11, 14, 21(2), 23, 26, 27. பொதுப்பாவமன்னிப்பு இருக்கும்நாள்:— ஆடி 2.

A. S. Francis of Mary
for Director

—அமெரிக்க ஐக்கியதேச மினெசோட்டாவைச்சேர்ந்த வபாஷா எனுமிடத்து அர்ச். பீலிக்ஸின்கோவில் விசாரணைப்பங்குக் குருவான வண. ஜோண் பர்த்தலோமி சுவாமியார் சென்ற வைகாசிமாதம் 14-ந்திகதியன்று தமது குருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடியபோது, 99 வயசுடைய அவர் தாயாரான ஸ்ரீமதி கத்தறின் பர்த்தலோமியும் சமுகமளித்திருந்தார். செண்கிளிவுட்நகரின் துணைமேற்றிராணியாரான பர்த்தலோமி ஆண்டவரும் இந்தமூதாட்டியின் புதல்வராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

"அண்ணு! சென்றவியாழன் சற்பிரசாதத் திருநாள் முடிவாகியதே. ஆமாம்; ஆனல், நாளைவெள்ளி உங்கள் சின்னயேசுவின் திருஇருதயத் திருநாள் அல்லவா! நமது சின்னயேசுவுக்கு எத்தனை எத்தனை திருநாட்கள்! அண்ணு! உங்களுக்கு என்ன கொண்டாட்டம் தானே! அத்துடன் பாடசாலையும் இல்லாதிருந்தால்........ஏன், இனிப்பும், படமும் போதாவா? இன்னும் பட்டி இல்லையா? சேட்டில் குத்திஞல் கலாதியாய் இருக்குமே! அது உபாத்தியாயரை, சிஸ்றரைக் கேட்கவேண்டும்."

"சின்னச் சிலுவைவீரர் நாம்,
சிறந்த பட்டாளமாய்ப் பட்டியுடன்......."

"நிறுத்துங்கள், நீங்கள் பாட்டில் வீரர்தான். திருஇருதயத் திருநாளில் நீங்கள் செய்ய வேண்டியது யாது? ஆண்டவர் அன்றுதினம் உங்களிடம் கேட்பது யாது? இத்திருநாளின் கருத்துஎன்ன? "அவருக்கென தினங்கள்பல. ஒவ்வொரு வாரத்தின் வெள்ளியும் அவருடைய நாள். ஒவ்வொரு மாசத்தின் முதல் வெள்ளியும் அவருடைய திருஇருதயத்துக்கென விசேஷமாக நேர்ந்து கொள்ளப்பட்ட நாள்.

ஆம், சிலுவைப்படை வீரராகிய நம்முடைய நாள், அந்த நாள். மேலும் ஆனிமாதம் முழுதும் அவருடைய திருஇருதயத்தின் வணக்கமாசம். ஈற்றில் வருஷத்தில் ஒருநாள், அதாவது சற்பிரசாதத் திருநாளின் அட்டகத்துக்குப் பின்வரும் வெள்ளி அவருடைய திருஇருதய மாபெரும் நாள். அவருடைய திருச்சுரூபத்தை அல்லது படத்தை உற்றுப் பார்த்தால் இத்திருநாளின் கருத்தை உணரலாம். தமது இடது கரத்தால் தம்முடைய இருதயத்தைச் சுட்டிக்காட்டியபடி, அல்லது சுடர்விட்டு எரியும் தம்முடைய இருதயத்தை அந்தக்கரத்தில் ஏந்தியபடியும், தமது வலது கரத்தை நம்மிடம் நீட்டியபடியும் இருக்கிறதை அவதானிக்கலாம். அவர் காட்டும் இருதயம் அன்பின் அடையாளம். நமது சின்ன யேசு தம்முடைய திருஇருதயத்தைச் சுட்டிக் காட்டுவதால் அவர் நம்மை அதிகம் நேசிப்பதாகத் தெரிவிக்கிருர். மறுகரத்தை நமது அண்டை நீட்டுவதால் நாமும் அவரை நேசிக்க வேண்டுமெனக் கேட்கிருர். "சிறுவரை நம்மிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடை செய்யாதீர்கள்" எனத் தமது மாதிரியால் சொல்லுகிருர். ஆண்டவர் நம்மை நேசிக்கிருரோ என்று விஞவினல், 'ஆம்' என்று சத்தம் இடுவீர்கள். ஆனல், அது எப்படித் தெரியும் என்ருல், எளிதில் சொல்ல மாட்டோம். நம்மைப்படைத்தவர் யார்? நம்மைப்போல் சிறு பாலஞக ஏன் பிறந்தார்? ஏன் பாடுபட்டார்? நம்மை நேசித்தபடியால்தான். நமது கோவிலில் இராப்பகலாய்ச் சற்பிரசாதத்தில் ஏன் இருக்கிருர்? நம்மை விட்டுப் பிரிய மனமில்லாமல் தான். ஆகையால் நாமும் இந்த நேசத்துக்குப் பிரதி நேசமாக— கைமாருக அவரை நேசிப்போம். நாம் உறங்கினல் என்ன, செபித்தால் என்ன, படித்தால் என்ன், வேலைசெய்தால் என்ன, விளையாடினல் என்ன, சிரித்தால் என்ன, அழுதால் என்ன, சகலத்தையும் நமது சின்னயேசுவின் நேசத்துக்காகச் செய்வோம். "எல்லாம் உமக்கே யேசுவின் திருஇருதயமே!"

ஞானப்பால்

"என்ன தாத்தா! நித்திரை கொள்ளுகிறீர்களா? என்று கேட்டுக் கொண்டே அவர் அருகில் அமர்ந்தோம்.

எங்கள் தாத்தா மிகவும் நல்லவர். பொன்னிறமான அவருடைய முகமும், ஒளிமிக்க கண்களும், சுருத்தத் தாடியும், சுருக்கேறிய நெற்றியும், எல்லாவற்றையும்விடச் சதா அவர்கையில் விளங்கும் செபமாலையும் தினம் எங்களை அவரிடம் அழைத்தன. அவர் எங்களுக்கு ரசமான கதைகள் சொல்வார்.

"தாத்தா, இன்றைக்கு நல்ல கதையாக ஒருகதை சொல்லுங்கள்" என்று வயதுவந்தும் நரைக்காத அவருடைய தாடியைத் தடவியபடி கேட்டான் குமார்.

"உம்......ம்"

"என்ன தாத்தா பலமானயோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறீர்கள்? ஊர்காவற்றுறையில் இருக்கிறதே அதையா?" என்ருன் நாதன்.

"கதை சொல்லுவதென்ருல் யோசிக்கவேண்டாமாடா காம்போதி? தாத்தாவுக்கு என்ன ஒன்று இரண்டா தெரியும்? ஒன்பதிஞயிரம்! அதில் எதைச் சொல்வதென்று யோசிக்கிருர்" என்றேன் நான்.

"ஓகோ! உனக்குச் சாத்திரம்கூடத் தெரிகிறதே" என்று சொன்னபடியே கதையை ஆரம்பித்தார் தாத்தா. "மக்களே! முதலாவது யுத்தம் நடந்ததல்லவா? அந்தக் காலத்திலே ......"

"என்ன தாத்தா, மகாயுத்தத்தோடு கதையைத் தொடங்குகிறீர்களே; எனக்குப் பயமாக இருக்கிறதே" என்ருன் நண்பன் நாதன் நடுங்குவது போல நடித்துக்கொண்டு.

சும்மா இருக்கமாட்டாயா என்று நாங்கள் அவனைக் கோபித்ததும் 'கப்சிப்' என்று இருந்துவிட்டான். தாத்தா தொடர்ந்தார்.

"எங்கள்வீட்டுக்கு அருகாமையில் ஓர்கத்தோலிக்க குடும்பம் இருந்தது. அவர்கள் தேவபக்தி உடையவர்கள். இரப்போருக்கு இல்லைஎன்ஞர்கள். நல்லவர்கள். இந்தப் பாழ்போன சமூகத்தில் நல்லாக இருக்க முடிகிறதா?" என்று பெருமூச்செறிந்தார்.

"என்னதாத்தா, அவர்கள் இறந்துவிட்டார்களா? பாவம். போயும் போயும் இந்தத்துக்கமான கதையையா சொல்வது?"

"அவர்கள் இறந்துவிட வில்லை. யுத்தத்திஞல் பஞ்சம் வந்தது. பஞ்சத்தால் அவர்களும் பாதிக்கப் பட்டார்கள். அவர்களின் ஒருவயதுப் பெண் குழந்தைக்குப் பால்வாங்குவதே பெரிய சிரமம். எத்தனையோ நாட்கள் அக்குழந்தை பாலின்றித் துவண்டிருக்கும்.

"ஒருநாள் பால்வாங்கச் சென்ற குழந்தையின் அப்பா இரவு வெகுநேரமாகியும் வீடு திரும்பவில்லை. குழந்தை பசியினல் வீரிட்டுக் கத்தியது. என்ன செய்வாள் அந்தத் தாய்? தேவதாயை மன்ருடிஞள். அவள் பிரார்த்தனைக்குக் குழந்தையின் அழுகை பக்கவாத்தியம் போல் ஒலித்தது.

யாரோகதவைத்தட்டியதும் கணவன் பாலுடன் திரும்பிவிட்டார் என்ற எண்ணத்துடன் கதவைத் திறந்தவள், பாட்டிஒருத்தி நிற்கக்கண்டு ஏமாற்றம் அடைந்தாள். குழந்தையின் குரல் கேட்டபாட்டி ஓடிச்சென்று அதனை எடுத்து அணைத்துக்கொண்டு "குழந்தை ஏன் அழுகிறது?" என்று கேட்டாள்.

"பாலில்லைப் பாட்டி" என்ருள் தாய். கண்ணீரைத் துடைத்தபடி, பிள்ளையைத் தாயிடம் கொடுத்துவிட்டு வெளிச்சென்ற மூதாட்டி, ஓர்கிண்ணம் நிறைந்த பாலுடன் ஓர்பாற்பசுவையும், கன்றையும் சாய்த்துக்கொண்டு அங்கு வந்தாள். குழந்தை கிண்ணத்திலுள்ள பாலைப் பருகியதும் நித்திரையாகிவிட்டது. நித்திரையில் அதன்முகம் மின்னல்எனப் பிரகாசித்தது.

"மகளே! இந்தப்பசுவை நான் வரும்வரைக்கும் நீங்கள் வைத்து என்னிடம் தருவீர்களா? பால் உங்கள் குழந்தைக்கு உதவும், நான் அயலூர் செல்கிறேன்" என்று கூறிவிட்டுப் பாட்டி விர்என வெளிச்சென்று விட்டாள்.

நித்திரை விட்டெழுந்த அச்சிறு குழந்தை,

"அன்னை மரியே, அன்புமரியே!
ஆண்டருள் அன்பாய்என் அன்புமரியே!
உன்னை மறவேன் என்அன்னைமரியே!
உன்பாதம்எனக்கருள் அன்னைமரியே!"

என்று பாடிற்று. இப்புதுமையைக் கண்டயாவரும் தேவதாயின் கருணையைப் போற்றிப் புகழ்ந்தனர், "அப்பிள்ளை உண்டது பசுப்பால் அல்ல ஞானப்பால்" என்றனர். அன்று தொடக்கம் அவளுக்கு ஞானமலர் என்று பெயரிட்டனர். சண்டை முடிந்ததும் பஞ்சம் பறந்தது. ஆனல், பக்குவம அடைந்த அப்பெண்பிள்ளை இப்போது கன்னியர்மடத் தலைவியாகக் கடமையாற்றுகிருள். அந்தப்பாட்டியைப் பற்றி இன்றளவும் யாருக்கும் தெரியாது என்று கதையை முடித்தார் தாத்தா.

"அந்த ஞானமலர் எந்தமடத்தில் இருக்கிருர் தாத்தா? நாங்கள் பார்க்க விரும்புகிருேம்" என்று ஆவலாய்க் கேட்டோம்.

"நானும்தான் விரும்புகிறேன். ஆனல், எங்கேயென்று தெரியவில்லை" என்ருர் தாத்தா.

"அந்தப்பாட்டி யார்என்று உங்களுக்குத் தெரியுமோ."

"மாதாவைத்தான் கேட்கவேண்டும்."

—கரம்

அர்ச். அந்தோனியார் திருநாள்

பாஷையூர்

பழமைநீங்கிப் புதுமைபெற்று விளங்கிற்று, புதுமைவரத்தரின் ஆலயம். அதன்முன் ஓர்அலங்காரபந்தல் திகழ்ந்தது. வெண்கதிர்மயமாகத் துலங்கியது, ஆலயத்தின் அகமும்புறமும். ஆனந்தகோஷத்துடன் கொடியேற்றப்பட்டுத் திருவிழா ஆரம்பமாயது. மாலைஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஆனிமாசம் 12-ந் திகதி பிற்பகல் 4-30 மணிக்குச் செபமாலைஆரம்பமாகி வேஸ்பர்பாடப்பட்டுத் திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. சுற்றுப்பிரகார வீதிகள் அழகாகக்காட்சியளித்தன. மறுநாள் அர்ச். அந்தோனியாரின் சலிகையைநாடி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்துகூடிய பக்தர்குழாம் ஆலயத்தில் தேங்கியிருக்க, மகாவந். மேற்றிராணியாண்டவர் திருநாட்பூசை நிறைவேற்றித் திருவிருந்தளித்தனர். பிற்பகல் 4-30 மணியளவில் செபமாலைமுடிவடைந்ததும் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபமும், அர்ச். செபஸ்தியாரின் திருச்சுரூபமும் சித்திரவேலைப்பாடமைந்த புதிய தேரில் எழுந்தருளச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாகிச் சூரியஅஸ்தமனவேளையிலே பாதித்தூரத்தைமுடித்துப் பின்னர் மின்சாரதீபாலங்காரத்துடனும், ஒலிபரப்பிமூலம் செபங்களுடனும், செவிக்கினியகீதங்களுடனும பக்தியருட்சிக்குரியவிதமாய் ஆலயத்தை அடைந்தது. அப்போது வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமிஅவர்கள் கோடிஅற்புதரைப்பற்றி அரியதோர் பிரசங்கம்செய்தனர். அதனைத் தொடர்ந்துகட்டளைக்குரவர் அதிவண. நீக்கிலாஸ்சுவாமிஅவர்கள் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளலாயினர். ஈற்றில் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே முடிவெய்தியது.

L. B. பிலிப்

"ஞானோதய நாடு"

அன்று ஞானம் ஓர்ஏழைப்பெண். வறுமையிலே பிறந்து, வறுமையிலே வளர்ந்த வனிதை. பகலும் இரவும் பாடுபட்ட ஓர் கமக்காரனின் மகள். வறுமையிலும் மனமகிழ்ந்து அறங்காத்த தாய்தந்தையரின் சொற்காத்து நடந்தவள் ஞானம். அன்றும் இன்றும் அவள் அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலிக்கிறது.

வறுமையால் வாடிய போதிலும் தங்கள் பிள்ளை ஞானத்தைப் படிக்க வைத்தல் தமது கடமை என்பதை உணர்ந்த அவள் பெற்ருேர் ஞானத்தை ஓர் ஆரம்ப கத்தோலிக்க பாடசாலையில் படிக்க வைத்தனர். இளமைமுதல் கல்வியில் கவனங்கொண்ட ஞானம் கடவுளையும் வணங்க மறக்கவில்லை. அவள் தாய் கூறியபடியே தவருது உள்ளன்போடு பரமனை வணங்கிவந்தாள். ஒவ்வோர்நாளும் காலை மாலை வேளையிலும், படுக்கைக்குச் செல்லு முன்பும், படுக்கையிலிருந்து துயில் நீங்கி எழும்போதும் சர்வேசுரனை வணங்கத் தவறவே மாட்டாள். வாரத்தில் ஒருமுறையேனும் பாவசங்கீர்த்தனம் செய்து பரமனைத் துதியாது விடவே மாட்டாள். வறுமையிலும் தூய்மையை வளர்த்து வந்தாள் ஞானம்.

யேசுவின் பாடுகளைப்பற்றிச் சுவாமியாரிடமும், தாயிடமும் கேட்டு மனம் பதைத்தாள். பரமண்டலத்தில் பாவிகள் புகமுடியாதே என்பதைக் கேட்டுப் பயந்தாள். பாவிகளின் மனதை நல்வழிப் படுத்துமாறு பல தடவைகள் பரமனை நோக்கிச் செபஞ் செய்தாள். சுவிசேஷத்தில் உள்ளபடி தன்வாழ்வு என்னும்வீடு நன்மை என்னும் கருங்கல்லில் அஸ்திவாரமிட்டு எழுப்பப்பட்டதா? அல்லது பாவம் என்னும் மணலில் அஸ்திவாரமிட்டு எழுப்பப்பட்டதா? என்று பல தடவை சிந்தனைசெய்தாள். மணலென்ருல் தன்வாழ்வு பாவவாழ்வு ஆகிவிடுமேயென நினைந்து திகைத்தாள். இந்த எண்ணத்தால் அவள் பரமனிடம் கொண்ட பக்தி பன்மடங்கு பெரிதாகியது. தன்னைப் பாவம் என்னும் படுகுழியில் விழாது பாதுகாத்துக் கொள்ளப் பரமன் தமது கிருபை என்னும் வேலியை அமைக்குமாறு இரந்தாள். அவளின் புகழ் பரமண்டலத்திலும், பூமண்டலத்திலும் பரவியது. அவளது ஞான ஒளியால் நலம் பெற்ற மக்கள் தம்நாட்டை "ஞானோதய நாடு" என்று நாமகரணம் செய்து கொண்டாடுகிருர்கள்.

R. S. S. Nathan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க செய்திகள்

United States Information Service, COLOMBO.

கம்யூனிஸ்தர்களின் முழக்கம்

— வாஷிங்ரன்

"கம்யூனிஸ்தர்களின் தலைமைப்பீடமாகிய கிறம்லின் எப்போதும் சமாதானம், சமாதானம்என்று திக்கதிர முழங்குகிறது; ஆனல், சமயம்கிடைக்கிறபோதெல்லாம சண்டையை இழுத்துவிடுகிறது. அவர்கள்சொல்வதற்கும், செய்வதற்கும் துளிகூடப் பொருத்தம் இல்லை. சொல்வதற்கு நேர்மாருனது அவர்கள்செயல்" என்று ஜனுதிபதி ட்றூமண் அவர்கள் இங்கு ரூமேனியவழிவந்த அமெரிக்கபிரசைகளின் பேட்டியில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

"நோய்க்கிருமிப் போரில் நாம் இறங்கிவிட்டதாக ரூஷியா கூப்பாடு போடுகிறது. அதில் திணையளவு நிசம் கூடக் கிடையாது. போர்முறையைப் பற்றி வகுக்கப்பட்டுள்ள ஜெனிவாக் கோட்பாடுகளை நாம் ஒருவிதத்திலும் மீறவில்லை. அது கம்யூனிஸ்தர்களுக்குத் தெரியும். நன்ருகவேதெரியும். ஆனலும், அவர்கள் ஆதாரமேயற்ற பொய்யைத் திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டேயிருக்கிருர்கள். ரூமேனியாவிலிருந்து பத்துலட்சம்பிரசைகளைச் சரீரப்பிரயாசையான வேலைகளுக்காக இடம்பெயர்த்துக் கடத்திக்கொண்டுபோகச் சோவியற்அரசு திட்டம்போட்டுள்ளது."

கம்யூனிஸ்தர்கள் கிறீஸ்நாட்டில் குழந்தைகளைக் கடத்திச்செல்வதையும், அகப்பட்டஆஸ்திரியாவில் ஆட்களை அடிமைக்கூலிகளாகத் திரட்டிச் செல்வதையும், இப்போது ரூமேனிய மக்கள் அதேஅவலநிலைக்கு ஆளாக்கப் படவிருப்பதையும் குறிப்பிட்டுக்காட்டிய ஜனுதிபதி ட்றூமண் அவர்கள் இவ்வளவு கம்யூனிஸ்தகொடுமைகளுக்கும் அவர்கள் (கம்யூனிஸ்தர்கள்) பதில் சொல்லியே தீரவேண்டும்என நினைக்கவில்லையா? என்று கேட்டார்.

சுதந்திரஉலக பலம்

— நியூயோக்

"சுதந்திரம், நீதி இவற்றைக்காத்து நிற்பதில், சுதந்திரஉலகமக்களை ஒன்றுதிரட்ட — அமெரிக்காபலமடைய — சமயப்பற்று மூலாதாரகாரணங்களில் ஒன்ருகும்" என்று ஜனுதிபதி ட்றூமண் அவர்கள் இங்குகூடிய பிறஸ்பிற்றீய கிறீஸ்தசபைமாநாட்டுக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடுகிருர்:

"அமெரிக்கமக்களின் சமயப்பற்ருனது நமதுதேசியவல்லமை ஓங்குவதற்கு உறுதுணைபாகஉள்ளது. அதே ஆதாரபலம் சுதந்திரஉலக மக்களுக்கும்இருக்கிறது. இந்தப்பலத்தைக் கொண்டுதான் அமெரிக்காஇப்போது சுதந்திரஉலகவல்லமையை ஒன்று திரட்டிவருகிறது. இறைவனிடத்து நம்பிக்கையும், சகலமனிதகுலத்திலும் விசுவாசமும்கொண்டு நடப்போமாகில் மனிதவர்க்கத்தின் லட்சியமாகிய நிரந்தரசமாதானத்தையும், சர்வதேசங்களிலும் நீதியையும் அடையாமல்இருக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமும், கிறீஸ்தவமும்

— கராச்சி

"பழுத்த நாஸ்திக லோகாயதவாதத்"தின் தாக்குதலினின்றும் ஆன்மீக, தார்மிக பண்புகளைப்பாதுகாக்க இஸ்லாமும், கிறீஸ்தவமும் ஒன்றுசேரவேண்டும்" என்று பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி சேர் மகமத் ஜாபருல்லாகான் அவர்கள் வற்புறுத்திக்கூறுகின்ருர். ஆன்மீக, தார்மிகபண்புகள் இஸ்லாம், கிறீஸ்தவம் இரண்டுக்கும் பொதுவானலட்சியங்கள் என்கிருர் ஜாபருல்லா கான். வெளிப்படையான வேறுபாடுகள் இவ்விரண்டுமதங்களையும் கம்யூனிஸத்துக்கு எதிராக இணைந்துகொள்வதற்குக் குறுக்கேநிற்கத் தேவையில்லைஎன்றும் அவர் குறிப்பிடுகின்ருர். "சுதந்திரஉலகம் கம்யூனிசத்தை எதிர்ப்பதற்கு முதல்முக்கிய காரணம் தார்மிகசிரத்தையே. பொருளாதாரவிஷயம் இரண்டாம் பட்சமானது. இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய இரண்டு மதங்களிலும் தனிநபர்உரிமை, இறைவனை மறவாமல் நேர்மையாகவாழ்வது, மாற்றவொண்ணுத் தெய்வீகநியதிகளை மதித்துஒழுகுவது- இவைகளே 'அடிப்படையானவை,'" என்கிருர் ஜாபருல்லாகான். கம்யூனிஸம் தனிநபர்உரிமையைத் தகர்த்துவிடுகிறது; நாஸ்திகவழிக் காடுகிறது.

இந்தியாவுக்கு ஒத்துவராது

— நியூயோக்

கம்யூனிஸ்தநடைமுறையானது இந்தியாஏற்றுக்கொள்ளத் தக்கதுஅல்ல என்றதீர்மானம், இந்தியநிர்வாகப் பிரதானிகள் அநேகருக்குப் புலப்பட்டுவருகிறது. இதற்கு என்ன அத்தாட்சி? இந்தியபாராளுமன்றத்திலே கம்யூனிஸ்தகட்சி அங்கத்தினர்கள் கடைப்பிடிக்கும் ஸ்ராலினிஸ்த குழப்ப தந்திரங்களே முதலாவதுஅத்தாட்சி. மேலும், அண்மையில் கம்யூனிஸ்தசீனு சென்றுதிரும்பியுள்ள இந்தியகோஷ்டியினரின் கருத்துக்களும் கம்யூனிஸம் இந்தியாவுக்கு ஆகாது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இந்தியகம்யூனிஸ்தர்கள் தங்கள்தலையில் தாங்களே மண்ணைப்போட்டுக்கொண்டு வருகின்ருர்கள்என்பது இப்போது புலனுகிவருகிறது.

நேருவின் அரசாங்கத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியினராக இருக்கும் கம்யூனிஸ்தஅங்கத்தினர்கள் தங்களுடைய ஸ்ராலினிஸ்த சூதுவாதுகள் காரணமாகத் தங்களுடன் கூட்டாகச் சேர்ந்தோரையே பகைத்துக்கொண்டு வருகின்றனர்என்பது புதுடில்லியிலிருந்து கிடைக்கும்தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

எடுத்ததற்கெல்லாம் முட்டுக்கட்டை போடுவதையே கம்யூனிஸ்தர்கள் இந்தியபாராளுமன்றத்தில் தங்கள்தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்என்பதை இந்தியபொதுமக்கள் உணரத்தலைப்பட்டுள்ளதையும், இத்தகவல்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. எதிர்க்கட்சி என்றமுறையில் புத்திசாலித்தனமாகவோ, உருப்படியாகவோ, ஒழுங்குமுறையாகவோ கம்யூனிஸ்தர்கள் ஒரு வார்த்தை சொல்வதில்லை. இந்தியாவுக்கு உபகாரமாக நேருவின் அரசாங்கம் திட்டமிடும் ஒவ்வொருகாரியத்தையும் அவர்கள் கண்மூடித்தனமாக எதிர்க்கிருர்கள். இந்த ஸ்ராலின் வித்தையானது அரசாங்ககட்சியில் இல்லாத மற்றஅங்கத்தினர்களுக்கும் கசப்பையும், அலுப்பையும் தந்திருக்கிறது.

"பேர்லினைத் தாக்கினல்..."

— பரீஸ்

பேர்லின்நகர்மீது ஏதாவதுதாக்குதல் நேரும்பட்சத்தில் அதனைத் தங்கள்மீதுதொடுத்த தாக்குதலாகவே பிரித்தானி, பிரான்ஸ், அமெரிக்கா ஆகியமூன்றும் கருதும். இதுபற்றிய பிரித்தானிய – பிரான்சிய – அமெரிக்க முக்கூட்டுஅறிக்கை கூறுவது பின்வருமாறு: பேர்லின்நகரிலே பாதுகாப்பையும், சேமாதாரத்தையும் நிறுவுவதும், அங்கே மூன்றுவல்லரசுகளும் மேற்கொண்டுள்ளபொறுப்பை நிறைவேற்றுவதும் தற்போதைய சர்வதேசநிலைமையில் சுதந்திரஉலக சமாதானத்திற்கு உறுதுணையானதிட்டத்தின் முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகின்றன. அதையொட்டி, எவ்வளவுகாலம் தங்கள்பொறுப்பு நிறைவேறத்தேவையோ அவ்வளவுகாலத்துக்கு இராணுவபலம் படைத்திருக்க இம்மூன்று வல்லரசுகளும் தீர்மானித்துள்ளன. எனவே, பேர்லின்நகர்மீது தாக்குதல்நடக்குமாயின் அதைத் தங்கள்மீதுதொடுத்த தாக்குதலாக இவ்வல்லரசுகள்கருதும். பரஸ்பரபாதுகாப்புக்குத் தக்கநடவடிக்கையை வடஅத்திலாந்திக்ஒப்பந்த ஒழுங்கின்படி எடுக்கும் என்பதை மூன்றுவல்லரசுகளும் மீண்டும் ஊர்சிதம்செய்திருக்கின்றன.

கத்தோலிக்க குடும்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துண்டு. இதுசரியான நோக்கமல்ல. பிள்ளைகளைத் தகுந்த நேரத்தில் பாடசாலைக்கு அனுப்புவதுடனும், படிப்புக்குவேண்டிய புத்தகங்களையும், சாமான்களையும் வாங்கிக் கொடுப்பதுடனும் பெற்ருேரின்கடமைநின்றுவிடவில்லை. அவர்கள் வீட்டைவிட்டுப் பாடசாலைக்குப்போகும் வழியில், அங்கிருந்து திருமபி வரும்வழியில் என்னசெய்கிருர்கள்? பாடசாலையில் அவர்கள் நடத்தைஎன்ன? எத்தகைய மாணவர்களுடன் புழங்குகிருர்கள்? என்றெல்லாம் பெற்ருேர் கவனிக்கவேண்டும். பிள்ளைகளுக்குக் கல்விகற்பிப்பது உபாத்திமாரின் கடமையென்று தாய்தந்தையர் அதில்யாதொரு கவனமும் செலுத்தாது வாளாவிருத்தல்கூடாது. பெற்ருேர்—உபாத்திமாரின் ஒத்துழைப்பு மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு மிகஅவசியம். இதற்காகவே பலகலாசாலைகளில் 'பெற்ருேர்சங்கம்' முதலியன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர்கள் கல்லூரியில் ஏறிவிட்டால் போதும்; இனிமேல் என்மகன், என்மகள் பொறுப்பாய் நடப்பார்கள்; அவர்கள்காரியத்தை அவர்களே பார்த்துக்கொள்வார்கள் என்று சிலபெற்ருேர் தன்னம்பிக்கை கொள்வார்கள். இது மிகவும் தவறு. இக்காலத்தில் தங்கள் பிள்ளைகள்வைக்கும் ஒவ்வொரு அடியிலும் பெற்ருேர் கவனம் செலுத்தவேண்டும். ஏனெனில், இதுதான் மாணவவாழ்க்கையில் மிகவும் மோசமானகாலம். இக்காலத்தில் தங்கள்பிள்ளைகள் கல்லூரியில் எவ்வாறு காலம்தள்ளுகிருர்கள்? வகுப்பு நேரம் போக, மீதிநேரம் என்னசெய்கிருர்கள்? எங்கேபோகிருர்கள்? யாருடன் பழகுகிருர்கள்? எத்தகைய கடிதப்போக்குவரத்து நடத்துகிருர்கள்? கல்லூரிக் காரியங்களுக்கென்று சொல்லி வீட்டிலிருந்துபெற்றுக் கொள்ளும்பணம் எதற்காக, எவ்வாறு செலவுசெய்கிருர்கள்? என்றெல்லாம் பெற்ருேர்குறிப்பாக அறியவேண்டும். ஒவ்வொருமாணவனும் படிப்பதற்கு வீட்டில்தகுந்தவசதி அளிக்கவேண்டும். அந்தநேரத்தை அவர்கள் எவ்வாறு செலவழிக்கிருர்கள்என்று பெற்ருேர்கவனிக்கவேண்டும். இவ்வாறு பிள்ளைகளை வளர்க்கும் ஒவ்வொருதாய்தந்தையும் தங்கள் மகன், அல்லதுமகள் சான்ருேர் எனக்கேட்டு பெரிதும்உவப்படைவார்கள்.

மரணஞாபகம்

17-6-1927—17-6-1952

முன்னேர்காலம் வல்வெட்டித்துறை அர்ச். செபஸ்தியார்கோவிற் சக்கிறிஸ்தாம் வேலைபார்த்துவந்த தொ. ஞானமுத்து, எக்ஸ்சைஸ் இன்ஸ்பெக்றர் தம்பிராசாஎன்பவர்களின்தந்தையும், கொழும்புத்துறை ஆசிரியகலாசாலையில் ஆங்கிலங் கற்பிப்பவரான செல்வநாதர், முகம பறியல்வீட்டில் ஓவசியர்வேலைபார்த்துவரும் குணநாயகம், சிங்கப்பூர் றெயில்வேயிற் கிளாக்வேலைபார்த்த சாமிநாதர்என்பவர்களின் பேரனுமான திரு. கயித்தாம்பிள்ளை தொம்மைப்பிள்ளைஅவர்கள் 17-6-1927-இல் மறுலோக பிராப்தியாஞர். அவரின் 25-வது வருஷஞாபகம் 17-6-1952-இல். அவரையிழந்து தின்புறும்மக்கள், பேரன்மார், பூட்டன்மார், சகல விசுவாசிகளோடு நாமும்அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுவோமாக.

T. Thambirasa

—வடஇத்தாலியிலே றீயெஸிஎனும் பட்டினத்தில் முத்.10-ம்பத்திநாதர்பிறந்த இல்லமானது இத்தாலியஜனுதிபதியாகிய எய்னேடிஅவர்களால்ஓர்தேசீய ஞாபகசின்னமாகப் பிரகடனஞ்செய்யப்பட்டிருக்கிறது. இந்தஇல்லமானது முத். பத்தாம் பத்திநாதரின் வாழ்க்கையுடனும், தொண்டுடனும் சம்பந்தப்பட்ட வஸ்துகள், சாசனங்களையும் அடக்கியிருக்கின்றது.

* * *

— 1946-ம் ஆண்டிலே பரீஸ்நகரில் 7,50,000 பிரதிகளுடன் வெளிவந்த "ஐக்ஷன்" என்ற கம்யூனிஸ்த வாரப்பத்திரிகை தற்போது ஆதரிப்பாரில்லாது நிற்பாட்டப்பட்டுள்ளது. 1946-ம் ஆண்டிலே 4,00,000 பிரதிகளுடன் அந்நகரிலே வெளிவந்த "எல'ஹியுமானிற்றே" எனும் கம்யூனிஸ்த தினவர்த்தமானி தற்போது 1,92,000 பிரதிகளுடனேயே வெளிவருகின்றது.

* * *

— பென்சில்வேனியாவைச் சேர்ந்த லற்ருேபேஎனுமிடத்து அர்ச். வின்சென்றின் சந்நியாசமடத்திலே ஓர் ஆசீர்வாதப்பர்சபைக் குருவாயிருந்த வண. அலோய்சியஸ் லூத்தேர்சுவாமியார் சமீபத்திலே தமது 81-வது வயதில் காலஞ்செல்லலாயினர். இவர் லூத்தேர் புரொட்டஸ்தாந்தசபையை உண்டுபண்ணிய மாட்டீன் லூத்தேரின் நேர்சந்ததியில் உதித்தவராவர்.

சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.

நேர்த்தியின் பூர்த்தி

முத்திப்பேறுபெற்ற மாட்டின் தே பொறஸின் விசேஷசலுகையால் எனது தகப்பன் ஜோசப் இசிதோர் பெறனுந்து அவர்களுக்குஏற்பட்டபாரிசவாதம், வாய்பேசாமை இவற்றிலிருந்து குணமடைந்தார். அவரதுஉதவியை மேலும் வேண்டுகின்ரேம். அவர்நாமம் புகழப்படுவதாக.

இ. பெறனுந்து

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 19-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org